சிறிதுநேரங்கழித்துத் திமிங்கலம் தனது சத்ருவை ஜயித்து விட்டு அங்கே வந்து பெட்டியை வாயில் அடக்கிக்கொண்டு ஸமுத்ரத்தில் ஸஞ்சரித்தது.

அப்பொழுது லங்கையில் ராவணன் ப்ரஹ்மதேவரைப் பார்த்து, "ஸ்வாமி! தங்களுடைய வார்த்தையை நான் பொய்யாகச் செய்துவிட்டேனல்லவா? தசரதரைக் கொன்றுவிட்டுக் கௌஸல்யையைப் பெட்டியில் பூட்டிவைத்திருக்கிறேன். இப்பொழுது என்ன சொல்லுகிறீர்?" என்று பரிஹாஸம் செய்தான். அதற்கு ப்ரஹ்மதேவரும் கைகளை உயரத்தூக்கிக்கொண்டு, "ஓம். இது புண்யதினம்" என்று ஸபையிலுள்ள எல்லோரும் கேட்கும்படி உரக்கச்சொன்னார். அதைக்கேட்டு ராவணன் திடுக்கிட்டு, "ஸ்வாமி! இதென்ன ஆச்சர்யம்?" என்றான். ப்ரஹ்மதேவர், "இன்றைக்குத் தசரதருக்கும் கௌஸல்யைக்கும் விவாஹமுஹூர்த்தம் நடந்தது. லோகநாதனான மஹாவிஷ்ணு அவர்களுக்குப் புத்ரனாய் அவதரிக்கப்போகிறார். அதனால் ஸகலலோகங்களுக்கும் மங்களமுண்டாகும்" என்றார்.

உடனே ராவணன் ப்ரஹ்மாவின் வார்த்தையைப் பொய்யாக்குவதற்காக, தூதர்களையழைத்துத் திமிங்கலத்தினிடம் தான் கொடுத்த பெட்டியை வரவழைத்துத் திறந்து பார்க்கையில், அதில் தசரதரும் கௌஸல்யையும் ஸுமந்த்ரரும் இருக்கக்கண்டு, சற்றுநேரம் ஒன்றுந்தோன்றாமல், பிறகு மிகுங்கோபங்கொண்டு தனது கையிலிருந்த கத்தியால் அவர்களை வெட்டப்போனான். உடனே ப்ரஹ்மதேவர் பரபரப்புடன் ராவணனைத் தடுத்து, "மூடா! என்ன கார்யஞ்செய்கிறாய்? இந்தப்பெட்டியில் முதலில் நீ கௌஸல்யையை மாத்ரம் வைத்தாய். இப்பொழுது மூவர்களிருக்கிறார்கள். அவசியமிருந்தால் ஜோடியாய் விருத்தியடைவார்கள். மஹாவிஷ்ணு இவர்களுக்குப் புத்ரனாய் அவதரிப்பது நிச்சயம். அவரால் உனக்கு மரணமும் நிச்சயம். இவர்கள் உன்னால் மரணத்தையடையார்கள். ஆகையால் இனி நடக்கப்போகிறது நடக்கட்டும். அதை இப்பொழுதே ஏன் வருவித்துக்கொள்ளுகிறாய்? நீ உன் தூதர்களைக்கொண்டு இவர்களை அயோத்யைக்கு அனுப்பிவிட்டு, லங்கையில் ஸுகமாய் வஸித்துக்கொண்டிரு. என் வார்த்தை பொய்யாகுமோ? நடக்கவேண்டியது நடந்தேதீரும். கர்மத்தின் மார்க்கமானது ஒருவராலும் கண்டுபிடிக்க

முடியாதது" என்றார். அதைக்கேட்டு ராவணன் நிஜமென்று நம்பி, மிகவும் பயந்து அந்தக்ஷணமே அவர்களை அயோத்யையில் கொண்டுபோய்விடும்படி தூதர்களுக்கு ஆக்ஞாபித்தான்.

அங்கிருந்தவர்களும் கோஸலதேசத்துஜனங்களும் தசரதரையும் கௌஸல்யையுங் கண்டு செத்துப்பிழைத்தவர்களைப்போல் அவர்களையெண்ணி, அவர்களுடைய வரலாற்றைக் கேட்டு அளவற்ற ஆநந்தத்தையும் ஆச்சர்யத்தையுமடைந்தார்கள். பிறகு தசரதருக்கும் கௌஸல்யைக்கும் விதிப்படி விவாஹம் நடந்தது. அப்பொழுது கோஸலராஜன் தன் ராஜ்யத்தைத் தசரதருக்குக் கொடுத்தான். அன்றுமுதல் கோஸலதேசத்தரசர்கள் ஸூர்யவம்சத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்படுகிறார்கள். பிறகு தசரதர், மகததேசத்தரசனுடைய புத்ரியான ஸுமித்ரையையும் கேகயராஜனின் புத்ரியான கைகேயியையும் விவாஹஞ்செய்தார். இவர்களைத்தவிர, காலக்ரமத்தில் எழுநூறு பார்யைகளையும் விவாஹஞ்செய்தார்—(ஆனந்தராமாயணம்—ஸாரகாண்டம். 1). [350 பார்யைகள் வா. ரா. II. 34.]

கௌஸல்யையும், கைகேயியும் க்ஷத்ரியஜாதி; ஸுமித்ரை ஸங்கரஜாதி—(பட்டிகாவ்யம் 6).

48-6-எல்லா பாபங்களையும்:– தசரதர் வனத்தில் வேட்டையாடும்போது ஒருவைச்யபுத்ரனை யானையென்று நினைத்துக் கொன்றுவிட்டார். அந்த தோஷத்தைப் போக்குவதற்காக அச்வமேதயாகத்தைச் செய்யும்படி வஸிஷ்டர் ஆக்ஞாபித்தார்.—(ஆ—ரா. ஸாரகாண்டம் 1).

ஒருநாள் தசரதர் தான் இரண்டுபுருஷர்களையும் ஒருஸ்த்ரீயையும் யாதொரு அபராதமும் செய்யாதிருக்கும்பொழுது கொன்றுவிட்டதாக ஸ்வப்னங்கண்டார். விழித்துக்கொண்டு மிகவும் பயந்து ஒருவர்க்குந்தெரியாமல் தன் குலகுருவான வஸிஷ்டரிடம்போய் ஸ்வப்னவிருத்தாந்தத்தைத் தெரிவித்தார். அவரும், "இது கெட்டஸ்வப்னம், மூன்று காட்டுமிருகங்களைக்கொன்று பிறகு [illegible] சாந்திசெய்தால் இந்தத்தோஷம் நீங்கும்" என்றார். அப்படியே தசரதரும் வனத்திற்குச் சென்று, மிருகங்களுக்காக மறைந்திருக்கையில், ஒரு வைச்யபுத்ரனை யானையென்று நினைத்துக்

கொன்றுவிட்டார். அதனால் மிகவும் வருத்தமடைந்து அயோத்யைக்கு வந்து வனத்தில் நடந்ததை வஸிஷ்டரிடத்தில் சொன்னார். அவர், "மஹாராஜ! கவலைப்படவேண்டாம். அச்வமேதயாகத்தைச்செய்து ஸகல பாபங்களினின்றும் விடுபடும். ஒப்பில்லாத நான்குபுத்ரர்கள் உமக்குப் பிறப்பார்கள். அதற்காக ரிச்யசிருங்க முனியை ப்ரார்த்தித்து எப்படியாவது அழைத்துக்கொண்டு வர வேண்டியது"என்றார்.

அந்தக்காலத்தில் தேவதைகளுக்கும் அஸுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் தேவேந்த்ரன் தசரதருடைய ஸஹாயத்தால் ஜயமடைந்து அவ்வரசனுக்கு விசேஷமர்யாதைகள் செய்தான். பிருஹஸ்பதியும், "மஹாராஜ! மூன்றுலோகத்திற்குமதிபதியான புத்ரன் உமக்குப் பிறப்பான்"என்று ஆசீர்வதித்தார். தசரதர், "ஸ்வாமி! நீங்கள் சொல்லும விஷயத்தில் வஸிஷ்டபகவான் என்னைப் புத்ரகாமேஷ்டிசெய்யும்படிக்கும் அதற்காக ரிச்யசிருங்கரையழைத்துவருபபடிக்கும் கட்டளையிட்டிருக்கிறார்"என்றார். அப்பொழுது இந்த்ரன் அப்ஸரஸ்களை வருவித்து, "நீங்கள் போய் அந்த ரிஷியை அயோத்யைக்கு எப்படியாவது அழைத்துக்கொண்டுபோங்கள்"என்று கட்டளையிட்டான். அவர்களும் அப்படியே சென்று அவரைத் தந்த்ரமாய் அயோத்யைக்கழைத்துவந்தார்கள். அப்பொழுது தசரதர் ஸந்தோஷித்துத், தன் ஸ்நேஹிதனை லோமபாதனுடைய புத்ரியான சாந்தையை அவருக்கு விவாஹம் செய்துகொடுத்தார்.—(அபியுக்தர்கள்)

10. வித்யாகுருககளையும்:— ரித்விக்குகளானதால் 'குருக்கள்' என்று சொல்லப்பட்டது.

13. ஸுயக்ஞர்:—இவர் வஸிஷ்டபுத்ரர்களில் ஒருவர்.

தசரதருக்கு வஸிஷ்டர் புரோஹிதராயிருந்ததுபோல் இவரும ராமனுக்குப் புரோஹிதராயிருந்தார். ராமன் காட்டிற்குப் போகும்பொழுது ஸுயக்ஞருக்கு அளவற்ற ஐச்வர்யங்களை வெகுமதியாகக் கொடுத்தார்.

ஜாபாலி:—ராமன் வனத்திலிருக்கையில் பரதன் அவரைத் திருப்பியழைத்து வரச்சென்றபோது அவர் ராமனுடைய மனதைப் பரீக்ஷிப்பதற்காக நாஸ்திகர்களுடைய மதத்தை அனுஸரித்தவர்போல் வாதஞ்செய்தார்.

14. காச்யபர்:—

ப்ரஹ்மா — மரீசி = கலை — காச்யபர்

தக்ஷப்ரஜாபதி = அஸிக்னி —

- —1. திமி—ஜலஜந்துக்கள்.
- —2. ஸரமை—புலி முதலிய நாற்கால் ஜந்துக்கள்.
- —3. ஸுரபி—குளம்புள்ள ஜந்துக்கள்.
- —4. தாம்ரை—கழுகு முதலிய பக்ஷிகள்.
- —5. முனி—அப்ஸரஸ்கள்.
- —6. க்ரோதவசை—பாம்பு முதலிய ஊர்வன.
- —7. இளை—மரஞ்செடிகள்.
- —8. ஸுரமை—ராக்ஷஸர்கள்.
- —9. அரிஷ்டை—கந்தர்வர்கள்.
- —10. காஷ்டை—மேற்சொன்ன மிருகங்களைத்தவிர மற்றவை.
- —11. தனு—தானவர்கள்.
- —12. அதிதி—ஆதித்யர்கள்.
- —13. திதி—தைத்யர்கள்.

---

11

காச்யபர் = தனு —

- —1. த்விமூர்த்தா
- —2. சம்பரன்
- —3. அரிஷ்டன்
- —4. ஹயக்ரீவன்
- —5. விபாவஸு
- —6. அயோமுகன்
- —7. சங்குசிரஸ்
- —8. ஸ்வர்பானு —— ப்ரபை = நமுசி
- —9. புலோமன்
- —10. விருஷபர்வா —— சர்மிஷ்டை = யயாதி.
- —11. ஏகசக்ரன்
- —12. அனுதாபனன்
- —13. தூம்ரகேசன்
- —14. விரூபாக்ஷன்
- —15 விப்ரசித்தி = ஸிம்ஹிகை —
  - —100 கேதுக்கள்.
  - —ராஹு
- —16. துர்ஜயன்
- —17. கபிலன்

III

காச்யபர் = அதிதி

- 1. விவஸ்வான்
- 2. அர்யமா
- 3. பூஷா
- 4. த்வஷ்டா
- 5. ஸவிதா
- 6. பகன்
- 7. தாதா
- 8. விதாதா
- 9. வருணன்
- 10. மித்ரன்
- 11. இந்த்ரன்
- 12. விஷ்ணு

IV

ஸம்ஜ்ஞை = விவஸ்வான் = சாயை

சாயை:
- 1. சனி
- 2. ஸாவர்ணி = மனு
- 3. தபதி (நதி) = ஸம்வரணன்

ஸம்ஜ்ஞை:
- 1. ச்ராத்ததேவமனு (வைவஸ்வதமனு)
- 2. யமன்
- 3. யமுனை
- 4. அசுவினீகுமாரர்கள்

---

VI

அர்யமா = மாத்ருகா
|
சர்ஷணீதேவதைகள்

த்வஷ்டா = ரசனா
|
விச்வரூபன்.

VII

ஸவிதா = ப்ரிச்னீ

- ஸாவித்ரீ
- வ்யாஹ்ருதீ
- த்ராயீ
- அக்னிஹோத்ரம்
- பசுயாகம்
- ஸோமயாகம்
- சாதுர்மாஸ்யம்
- பஞ்சமஹாயக்ஞங்கள்.

VIII

பகன் = ஸித்தி

- மஹிமா
- விபு
- ப்ரபு
- ஆசிஸ்

குஹூ = ஸினீவாலி = தாதா = ராகா = அநுமதி

- குஹூ: ஸாயங்காலம்.
- ஸினீவாலி: அமாவாஸ்யை
- ராகா: காலை.
- அநுமதி: பூர்ணிமாவாஸ்யை.

IX மித்ரன்
=
ரேவதி
— உத்ஸர்க்கள்
— அரிஷ்டன்
— பிப்பலன்

X (1) வருணன்
=
சர்ஷணி
— பிருகு
— வால்மீகி

(2) வருணன் = ஊர்வசி = மித்ரன்
— அகஸ்த்யர்
— வஸிஷ்டர்.

XI
விதாதா.
=
க்ரியை.
|
புரீஷ்யர்கள் (5)

XII
இந்த்ரன்
=
பௌலோமீ (சசி)
— ஜயந்தன்
— ரிஷபன்
— மீடுஷன்

XIII
விஷ்ணு
=
கீர்த்தி
|
ப்ருஹத்ச்லோகன்.
|
ஸம்போகன்.

(தைத்யவம்சம்) XIV

- காச்யபர் = திதி
  - ஹிரண்யகசிபு = கயாது
    - ஸம்ஹ்லாதன் = மதி
      - பஞ்சஜனன்
    - ஸிம்ஹிகை = விப்ரசித்தி
      - ராஹு
    - அனுஹ்லாதன் = ஸூர்யா
      - வாஷ்கலன்
      - மஹிஷன்
    - ஹ்லாதன் = தமனீ
      - வாதாபி
      - இல்வலன்
    - ப்ரஹ்லாதன் = த்ரர்வி
      - விரோசனன்
        - பலி = அசனு
          - பாணன்
          - 99 பெயர்கள்
  - ஹிரண்யாக்ஷன் = பாநு
  - 49 மருத்துக்கள்.

(பாகவதம் ஸ்கந்தம் 6. 18)

காச்யபருடைய பார்யைகள்:— அதிதி, திதி, தநு, அரிஷ்டை, ஸுரஸை, கஸை, ஸுரபி, வினதை, தாம்ரை, க்ரோதவசை, இளா, கத்ரு, முனி. சாக்ஷுஷ மன்வந்தரத்தில் 'துஷிதர்' என்ற பன்னிரண்டு தேவர்கள், "நாம் வரும் வைவஸ்வத மன்வந்தரத்தில் அதிதியின் கர்ப்பத்

தில் பிறந்து விசேஷகீர்த்தியையடைவோம்'' என்று நிச்சயித்தார்கள். அவர்களே ஆதித்யர்கள். [விதாதாவுக்குப்பதிலாக அம்சன்].—விஷ்ணுபுராணம் I. 15.

வாயுபுராணத்தில் அரிஷ்டைக்குப்பதிலாக ப்ரபையும், ஸுரஸைக்குப்பதிலாக அனுயுஸ் என்பவளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

பத்மபுராணம் ௨-ல், காலை, அனுயுஷ், ஸிம்ஹிகை, பிசாசை, வாக், (அரிஷ்டைக்குப்பதிலாக) ஸுரஸை, ஸுரபி, தாம்ரை, முனி என்று சொல்லப்பட்டிருக்கிறது. [இளையும் கஷையும் விடப்பட்டிருக்கிறது]. ஆனால் ஷை உத்தரகண்டத்தில் காச்யபருடைய பார்யைகள், அதிதி, திதி, கத்ரு, விநதை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விஷ்ணு புராணம் III 1. ல், துஷிதர்கள் ஸ்வாரோசிஷமன்வந்தரத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. வாயுபுராணத்தில இந்தக் கல்பத்தின் ஆரம்பத்தில் ப்ரஹ்மா, ஜயர்களென்ற பன்னிரண்டு தேவதைகளை ஸிருஷ்டிகார்யத்தில் தனக்கு ஒத்தாசைசெய்யும்படி நியமித்தாரென்றும்; அவர்கள் கலையாத ஸமாதியிலிருந்து அவருடைய ஆக்ஞையை அலக்ஷ்யம் செய்தபடியால், அவர்களை ஏழாவது மன்வந்தரம்வரையில் ஒவ்வொரு மன்வந்தரத்திலும் பிறக்கும்படி சபித்ததாகவும்; அவர்களுக்கு முறையே அஜிதர்கள், துஷிதர்கள், ஸத்யர்கள், ஹரிகள், வைகுண்டர்கள், ஸாத்யர்கள், ஆதித்யர்கள் என்று பெயர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அரிஷ்டநேமி தக்ஷப்ரஜாபதியின் நான்குபெண்களை விவாஹம் செய்துகொண்டதாகப் பாகவதத்திலும் விஷ்ணுபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பாரதத்தில் காச்யபருக்கே அரிஷ்டநேமியென்ற பெயருண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தில் அரிஷ்டநேமிக்குப் பதிலாக தார்க்ஷன் என்றும்; அவருக்குக் கத்ரு, விநதை, பதங்கீ, யாமினீயென்றவர்கள் பார்யைகளென்றும்; அவர்களுக்கு முறையே ஸர்ப்பங்கள், பக்ஷிகள், தத்துக்கிளிகள், வெட்டுப்பூச்சிகள் உண்டாயினவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வ்யாக்யானகாரர், 'தார்க்ஷர் என்பது காச்யபருக்கே மற்றொரு பெயரெ'ன்று சொல்லியிருக்கிறார்.

ஸம்ஹ்ராதனுடைய புத்ரர்கள்:—ஆயுஷ்மான், சிபி, வாஷ்கலன்,—(விஷ்ணுபுராணம் I 21.)

இவர்கள் ப்ரஹ்லாதனுடைய புத்ரர்கள்—(பத்மபுராணம்).

- ஹ்லாதன்
  - நிஸுந்தன்
    - ஸுந்தன்
      - மாரீசன்
      - தாடகை
    - உபஸுந்தன்
      - மூகன்

(வாயுபுராணம்).

ஹிரண்யாக்ஷனுடைய புத்ரர்கள்:—ஜர்ஜரன், சகுனி, பூதஸந்தாபனன், மஹாநாபன், மஹாபாஹு, காலநாபன் [சில பாடங்களில் தாரகன்].

தனுவினுடைய புத்ரர்களில் சங்கரனையும தாரகனையும் சேர்த்திருக்கிறது.(விஷ்ணுபுராணம் I. 21). ஸிம்ஹிகையின் புத்ரர்களில் ராஹுகேதுக்களைத்தவிர மற்றவர்கள் பரசுராமரால் கொல்லப்பட்டார்கள்—(வாயுபுராணம்).

தனுபுத்ரர்களில் புலோமனுடையபெண் சசீயென்பவள் இந்த்ரனுக்குப் பார்யையாய் ஜயந்தனைப்பெற்றாள். புலோமனுடன் பிறந்த மயனென்பவனுக்கு வஜ்ரகாமை, மந்தோதரீ என்று இரண்டு புத்ரிகள்—(வாயுபுராணம்).

காச்யபருக்குத் தாம்ரையினிடத்தில சுகீ, சயேனீ, பாஸீ, ஸுக்ரீவை, சுசி, க்ருத்ரீ, என்ற ஆறுபெண்கள்; அவர்களில் சுகீக்குககோட்டான்களும் காக்கைகளும்; சயேனீக்குப்பருந்துகளும், பாஸீக்குச் செம்போத்துகளும்; க்ருத்ரீக்குக கழுகுகளும்; சுசிக்குத் தண்ணீர்ப் பறவைகளும்; ஸுக்ரீவைக்குக் குதிரைகளும் கழுதைகளும் ஒட்டகங்களும் பிறந்தன. [கருடனுக்கும் சுகீக்கும் கிளிகளும்; அருணனுக்கும் சயேனீக்கும் ஸம்பாதியும ஜடாயுவும்; கருடனுக்கும் பாஸீக்கும் கோட்டான்கள், காக்கைகள், மயில்கள், புறாக்கள், கோழிகளும்; கருடனுக்கும க்ரௌஞ்சிக்கும் நாரைகளும்; கருடனுக்கும் த்ருதராஷ்ட்ரீக்கும் வாத்து முதலிய நீர்ப்பறவைகளும் பிறந்தன—வாயுபுராணம்]. காச்யபருக்கும் விநதைக்கும் அரு

ணன் கருடன் என்று இரண்டு புத்ரர்கள். அவர்களில் ஸுபர்ணன்
என்ற கருடன், பக்ஷிகுலத்திற்கெல்லாம் ச்ரேஷ்டனுயும் ஸர்ப்பங்
களுக்குச் சத்ருவாயுமிருந்தான். [வேதத்தின் சந்தஸ்கள் வின
தையின் பெண்கள்—(வாயுபுராணம்). ஸௌதாமினி என்பவள்
வினதையின் பெண்—பாத்மபுராணம்]. ஸுரஸைக்கு அநேகம்
ஸர்ப்பங்கள் பிறந்தன. அவைகள் அநேக சிரஸுள்ளவை
களும் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கக்கூடியவைகளும் மஹாசக்தியு
டையவைகளுமாயிருந்தன. [வாயுபுராணத்திலும் பாத்மத்திலும்
ஸுரஸைக்குப் பதிலாக அனுயுஸ் என்றுசொல்லப்பட்டிருக்
கிறது. மத்ஸ்யபுராணத்தில் ஸுரஸை அனுயுஷ் இருவர்க
ளும் காசயபருடைய பார்யைகளென்றும், ஸுரஸைக்குப்
பசுகளைத்தவிர மற்ற நாற்கால்மிருகங்களும், அனுயுஸுக்கு வ்யா
திகளும் பிறந்தனவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது]. கத்ரு
வுக்கு விசேஷபலமும் தேஜஸுமுள்ளவைகளாய் அநேகந்தலைக
ளுள்ள நாகங்கள் பிறந்தன. அவர்களில், சேஷன், வாஸுகி,
தக்ஷகன், சங்கன், ச்வேதன், மஹாபத்மன், கம்பளன், அசவத
ரன், ஏலாபுத்ரன், கார்கோடகன், தனஞ்ஜயன் முக்யமானவர்
கள். [வாயுபுராணத்தில் ஐராவதன், திருதராஷ்ட்ரன், மஹா
நிலன், வலாஹகன், அஞ்சனன், புஷ்பதம்ஷ்ட்ரன், துர்முகன்,
காளியன், புண்டரீகன், நஹுஷன், மணி என்பவர்கள் சேர்க்கப்
பட்டிருக்கிறார்கள். க்ரோதவசைக்குப் பதினாயிரம ராக்ஷஸர்க
ளும் ஸர்ப்பங்களும் நிலத்திலும நீரிலும ஸஞ்சரிக்கும் பறவைக
ளும் பிறந்தார்கள். அவர்கள் மாம்ஸத்தைப் புஜிப்பவர்களாயும
கூர்மையான பற்களுமுடையவர்களாயுமிருந்தார்கள். [க்ரோதவ
சைக்கு மிருகீமுதலான பன்னிரண்டு பெண்கள். அவர்களுக்குக்
காட்டுமிருகங்கள், மான்கள், யானைகள், குரங்குகள், புலிகள்,
ஸிம்ஹங்கள், நாய்கள், மீன்கள், ஊரும் ஜந்துக்கள், பூதங்கள்,
பிசாசங்கள் பிறந்தன—வாயுபுராணம்]. ஸுரபிக்குப் பசுக்களும்
ருத்ரர்களும் பிறந்தன. [வாயுபுராணத்தில் ஏகாதசருத்ரர்களும்,
சிவனுடைய விருஷபமும், ரோஹிணி சந்தர்வியென்ற பெண்க
ளும், பிறந்தனவென்றும்; கொம்புள்ள பசுக்கள் ரோஹிணிக்கும்,
குதிரைகள் கந்தர்விக்கும் பிறந்தனவென்றும் சொல்லப்பட்டிருக்
கிறது]. கஸைக்கு ராக்ஷஸர்களும் யக்ஷர்களும் பிறந்தார்கள்.
[வாக் என்பவளுக்கு அப்ஸரஸ்களும் கந்தர்வர்களும் பிறந்தார்

கள்—பாத்மபுராணம். அப்ஸரஸ்கள், லௌகிகம், தைவிகம் என இருவகை. ரம்பை, திலோத்தமை, மிச்ரகேசிமுதலிய முப்பத்து நான்குபெயர்கள லௌகிகர்கள்; மேனகை, ஸஹஜன்யை, கிருதாசி, ப்ரம்லோசை, விச்வாசி, பூர்வசித்திமுதலிய 10-பெயர்கள் தைவிகர்கள். நாராயணரிஷியினிடத்திலிருந்து பிறந்த ஊர்வசியென்பவள் இவ்விரண்டிலும் சேராதவள். மேலும் ஆஹூதைகள், சோபயந்திகள், வேகமதிகள் என்ற பதினன்கு அப்ஸரஸ்கணங்களும் உண்டு—வாயுபுராணம்]. இந்தக் காச்யபஸிருஷ்டி இரண்டாவது அல்லது ஸ்வாரோசிஷமன்வந்தரத்தில்நடந்தது—விஷ்ணுபுராணம் I. 21.

சிம்சுமாரசக்ரத்தினுடைய வாலிலிருக்கும் நான்கு நக்ஷத்ரங்களில் காச்யபர் ஒருவர்— ஷை II. 12.

ப்ராஜாபதிகளில் ஒருவர். இவர்களுக்கு பர்வதன் விபண்டகனென்றும் இரண்டு புத்ரர்களுண்டு.

இப்பொழுது நடக்கும் மன்வந்தரத்தில் பகவான் காச்யபருக்கும் அதிதிக்கும் புத்ரராய் அவதரித்து வாமனரூபியாய் மஹாபலியை ஜயித்து லோகங்களைக் காப்பாற்றினர்.

பரசுராமர் க்ஷத்ரியவம்சத்தை வேரறுத்து அச்வமேதயாகஞ்செய்து அதில் காச்யபருக்குப் பூமியை யாகதக்ஷிணையாகக் கொடுத்தார். அவரும் உடனே, "எனக்குக் கொடுக்கப்பட்ட ஸ்தலத்தில் நீ வஸிக்கக்கூடாது. அப்படி வஸித்தாலும் இரவில் தங்கக்கூடாது" என்றார். பிறகு பரசுராமர் ஸமுத்ரத்தில் ஒரு பாணத்தை ப்ரயோகித்து அதைத் தனக்கு இடங்கொடுக்கச்செய்தார்.—வா. ரா. I. 76.

இவரை ரிக்வேதம VI. 29; IX 64, 67, 91, 92, 103; I. 99, வது ஸூக்தங்களுக்குக் கர்த்தாவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

18. வம்சவிருத்திகரமாகிய:—ஆர்யர்களுக்குள் புத்ரனில்லாதிருப்பது மஹாபாபத்தின் பலமென்றும், பிள்ளையில்லாதவன் 'புத்' என்ற நரகத்தில் விழுகிறனென்றும், அப்படி விழாமல் அவனைக் காப்பாற்றுவதால் புத்ரனென்ற பெயர் வந்ததென்றும் சாஸ்த்ரஸம்மதம். இந்த அபிப்ராயத்திற்கு வாஸ்தவகாரணமென்ன? தகப்பன் விசேஷ தனவானாயிருந்து அவனுக்குப் பிள்ளையில்லாமலிருந்தால், "நாம் கஷ்டப்பட்டுத் தேடின ஐச்வர்யத்தை நாம் இறந்

பிறகு அனுபவிக்க ஒரு பிள்ளையில்லாமல் இதரர்களுக்குப்போமே,"வென்ற வருத்தமுண்டாவது ஸஹஜம். ஆனால் ஏழைகள் அப்படி வருத்தப்படுவதற்கு நியாயமில்லை. சாஸ்த்ரமோ "இது எல்லாருக்கும் பொதுவான விதி,"யென்றும், "பிள்ளையில்லாதது மஹாபாபஜன்மமெ"ன்றும், "புத்ரனையடைவது மஹாபுண்ய ஜன்மமெ"ன்றும் சொல்லுகிறது. நம்மவர்கள் இவ்வளவு ஆவலுடன் புத்ரனை விரும்புவானேன்?

முன்காலத்தில் நமது தேசத்தில் ஒவ்வொருவரும் லோகத்தில்செய்யவேண்டிய கடமை என்னவென்றால் :—பூர்வகர்ம ஸம்பந்தத்தால் தன்னிடத்தில் வந்து சேர்ந்திருக்கும் குடும்பத்தையும் பந்துக்களையும் ரக்ஷிப்பது ; தான் முன்னிருந்த பதவியிலிருந்து அடுத்தபடிக்குப் போவதற்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்வது; ஸ்வதர்ம அனுஷ்டானம். லோகத்திலிருக்கும் ஜீவகோடிகள் ஸௌக்யமாய் வாழ்வதற்கும், ஞானத்தையடைந்து, பகவத்ஸ்வரூபத்தையறிந்து மேன்மேலும் உத்தமபதவியைச் சேருவதற்கும், ஸாதனமான கர்மகாண்டம், ஞானகாண்டம் இவைகளைக்கற்று அனுஷ்டிப்பது; அக்னிஹோத்ரம், யாகயக்ஞம் பலிகள் முதலியவைகளால் ஸகல பூதங்களையும் தேவதைகளையும் திருப்தி செய்வதால் இந்தலோகத்தில் ஸகலவித க்ஷேமத்தையும் ப்ரஹ்ம ஞானத்தால் முக்தியையும் அடைவது. இந்த லோகோபகாரமான கார்யத்தை ஒவ்வொருவனும் தன்னால் கூடியவரையில் செய்துகொண்டுவரவேண்டியது தவிர, தனக்குப் பிறகாலத்தில் அந்தக் கடமையை ஸரியாய் நிர்வஹிக்கக்கூடிய ஒருவனை அந்த ஸ்தானத்தில் வைத்துவிட்டுப் போகவேண்டியது. இவன் புண்யாத்மாவாயும் சுத்தனாயும் தர்மசிந்தையுள்ளவனாயுமிருந்தால் இவனுடைய ஸ்வபாவத்திற்கொத்த மற்றொரு ஜீவன் இவனுடைய குடும்பத்தில் பிறக்கும்படியான காரணமுண்டாகும். ஏனென்றால், அந்த ஜீவனுக்குக் கர்மவ்யவஹாரத்திற்குத் தகுந்த தேஹத்தை இவனே கொடுக்கமுடியும். அப்படியில்லாவிட்டால் உத்தமமான ஜீவன் இவனிடத்தில் வந்து சேர நியாயமில்லை. ஆகையால் அதற்குத் தடையாயிருக்கும் பாபங்களை ப்ராயச்சித்தம் முதலியவைகளால் போக்கிக்கொண்டால் உத்தமமான புத்ரன் பிறப்பதற்கு அனுகூலமாகும். ஈச்வரன் நம்மை ஒருவேலையைப் பார்க்கும்படி நியமித்திருக்கும்பொழுது நமக்கு ஸம்மதமாக அந்த வேலையைப் பார்க்கக்கூடிய

ழுருவனை அந்தஸ்தானத்தில் வைக்காமல் நாம் போவது யஜமானத்ரோஹம். அதையே மஹாபாபமென்று சொல்லுகிறது.

49-4. வடகரையில். அயோத்யை ஸரயூநதியின் தென்கரையிலிருந்ததாகத் தெரியவருகிறது.

6. சாந்திக்ரியைகள்:—விக்னங்களை விலக்கும்பொருட்டுச் செய்யும்கர்மங்கள்.

7. ப்ரஹ்மராக்ஷஸர்கள். பாபங்களைச் செய்து ப்ராயச்சித்தஞ்செய்துகொள்ளாமலிருத்தல்; தானம் வாங்கக்கூடாத பதார்த்தங்களைத் தானம் வாங்குதல்; யாகஞ்செய்யத்தகாதவர்களுக்கு யாகஞ்செய்வித்தல் முதலிய பாபங்களைச் செய்த ப்ராஹ்மணர்கள் ப்ரஹ்மராக்ஷஸர்களாகப் பிறக்கிறார்கள். அவர்களுக்கு யக்ஞங்களின் லக்ஷணமும் அவைகளைச் செய்யும் விதியும் அவைகளில் நேரக்கூடிய குறைகளும் நன்றாய்த்தெரியுமாதலால் அசவமேதயாகம் நடக்கும்பொழுது குறைகள் நேருவதற்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள்; அப்படி நேர்ந்தால் யகஞத்தைத் தங்களுடைய நாசச்செய்துகொண்டு நாசஞ்செய்கிறார்கள்.

யக்ஞங்களில் க்ரியை மந்த்ரம் முதலானவைகளில் ஏதாவது குறைவு நேரிட்டு அதனால் ராக்ஷஸஜன்மத்தையடைந்த ப்ராஹ்மணர்கள் ப்ரஹ்மராக்ஷஸர்கள்.—திலகம்.

16. ஆசீர்வாதஞ்செய்துவிட்டு—"வருமசித்ரைமாஸம் பௌர்ணமியில் அப்பாயே செய்யேரும்" என்று சொல்லிவிட்டு.

---

## ஸர்க்கம் 9.

பகவான் அவதரிப்பதற்கு முக்யகாரணமான புத்ரகாமேஷ்டி நடப்பதற்குக் காரணங்களை 9, 10, 11 ஸர்க்கங்களில் சொல்லுகிறார்.

32. ஸனத்குமாரர். ப்ரஹ்மாவினுடைய ஸிருஷ்டி 10-விதம். 1-மஹத். 2 அஹங்காரம். 3 தன்மாத்ரைகள். 4. இந்த்ரியங்கள். 5. வைகாரிகதேவதைகளும் மனஸும். 6. ஐந்துவித தாமஸீகஸிருஷ்டி. 7. ஸ்தாவரங்கள். 8. மிருகங்கள் 9. மனுஷ்யர்கள். 10. குமாரர்கள்—(பாகவதம் III. 10). ப்ரஹ்மதேவர் தாமஸீகஸிருஷ்டி தன் இஷ்டப்படி இல்லாமற்போனதைக்

கண்டு, த்யானத்தால் தன் மனதைச் சுத்தப்படுத்திக்கொண்டு, ஸனகர், ஸநந்தனர், ஸநாதனர், என்ற குமாரர்களை ஸ்ருஷ்டித்தார். இவர்கள் கர்மபந்தத்திற்குட்படாதவர்கள். தபஸ் த்யானம் முதலியவைகளால் அவர்களுக்காகவேண்டியது ஒன்றுமில்லை. எப்பொழுதும் குமாரர்களாயும் ப்ரஹ்மசாரிகளாயும் இருப்பதால் குமாரர்களென்று பெயராயிற்று. ப்ரஹ்மா அவர்களைப்பார்த்துக் "குழந்தைகளே! ப்ரஜாஸ்ருஷ்டி செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தார். ஆனால் அவர்கள் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களாய் அவருடைய கட்டளையை அலக்ஷ்யம் செய்தார்கள். அதனால் ப்ரஹ்மதேவருக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று—(பா. III 12.)

ஒருகாலத்தில் ஸனகாதிகள் மஹாவிஷ்ணுவைத் தர்சிக்க வைகுண்டத்திற்குச் சென்றார்கள். ஏழாவது வாசலில் ஜயன் விஜயன் என்ற த்வாரபாலர்கள் தடுத்தார்கள். குமாரர்கள் கோபங்கொண்டு "இதென்ன? ஸர்வவ்யாபியான பகவானைத் தர்சனஞ்செய்வதற்குத் தடையுமுண்டா? அவருக்கு ஏதாவது அபாயம் நேரிடுமென்று எங்களைப்போன்றவர்களை உள்ளேவிடாமல் தடுக்கிறீர்களா? நீங்கள் பரவானுடைய ஸேவகர்கள்; உங்களிடத்தில் கடுமையாயிருப்பது ந்யாயமல்ல. ஆனாலும் நீங்கள் இங்கிருக்கத் தகுந்தவர்களல்ல. காமக்ரோதலோபங்களுக்கிடமான பூமியில் வஸியுங்கள்" என்று சபித்தார்கள். அவர்களே ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷனென்றும், ராவண கும்பகர்ணனென்றும், சிசுபால தந்தவக்ரனென்றும் மூன்று ஜன்மங்களெடுத்தார்கள்.—(பா. III 14).

குமாரர்கள் ஸனர், ஸநத்ஸுஜாதர், ஸனகர், ஸநந்தனர், ஸனத்குமாரர், ஸநாதனர், கபிலர், என்று ஏழு பெயர்கள். அவர்கள் ஸ்வபாவமாகவே ஞானிகள். எப்பொழுதும் மோக்ஷமார்க்கத்தையே அநுஸரித்தவர்கள். ஜீவன்களுடைய புத்தியை அந்த வழியில் திருப்புகிறவர்கள்; மஹாயோகிகள்.—(பாரதம், சாந்தி பர்வம் 341.)

ஸனகர், ஸநந்தனர், ஸநாதனர், ஆஸுரி, கபிலர், வோடு, பஞ்சசிகர், (ஈச்வரக்ருஷ்ணருடைய ஸாங்க்யகாரிகை).

லிங்கபுராணத்தில் ஸனத்குமாரரும் ரிபுவும் குமாரர்களில் மூத்தவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

கூர்மபுராணத்தில் குமாரர்கள் ஐவரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

லிங்கபுராணத்தில் சிவன் ஒவ்வொரு யுகத்திலும் ப்ரஹ்மாவினுடைய குமாரராய் அவதரித்துத் தானே நான்கு குமாரர்களாய் விளங்குகிறாரென்றும், 29-வது கல்பத்தில் ச்வேதலோஹிதர் என்ற குமாரர்கள், ஸநந்தர், நந்தனர், விச்வநந்தனர், உபநந்தனர், என்று நான்கு ரூபமாய் வெண்ணிறத்துடன் விளங்கினார்களென்றும்; 30-வது கல்பத்தில் விரஜஸ், விவாஹு, விசோகர், விச்வபாவனர் என்று சிவப்புவர்ணத்துடன் விளங்கினார்களென்றும்; 31-வது கல்பத்தில் மஞ்சள் வர்ணத்துடனும், 32-வது கல்பத்தில் கறுப்பு வர்ணத்துடனும் அவதரித்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருகாலத்தில் ஸனகாதியோகிகள் பகவானுடைய ஸ்வரூபத்தையும் ஆத்மதத்வத்தையும் அறியமுடியாமல் 3½ கோடிவர்ஷங்கள் பரமசிவனைக்குறித்துத் தபஸ்செய்தார்கள். முடிவில் பரமசிவன் ப்ரஸன்னமாய்க் கல்லாலமரத்தின்கீழ் தக்ஷிணாமூர்த்திரூபமாய் அவர்களுக்குத் தர்சனங்கொடுத்தார். ஸனகாதிகள் அவரைத் தர்சித்து, அவருடைய கையில் விளங்கின சின்முத்திரையைப் பார்த்துத் தங்களுடைய ஸகல ஸந்தேஹங்கள் தீர்ந்து ஆநந்தமடைந்தார்கள். என்ன ஆச்சர்யம்! உபதேசம் செய்தவிடமோ ஆலமரத்தடி; குருவோ குழந்தை; சிஷ்யர்களோ மிகவும் வயஸ்சென்றவர்கள்; குருவினுடைய உபதேசமோ மௌனம்; சிஷ்யர்களுக்கோ அந்த உபதேசத்தால் ஸந்தேஹமற்றது.—(தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்;—ஸதாசிவப்ரஹ்மத்தின் ஆத்மவித்யாவிலாஸம்).

தன் புத்ரர்களுக்கு நேர்ந்த அபஜயத்தையும் கஷ்டங்களையும் பார்த்துப் புத்தி மயங்கி, திருதராஷ்ட்ரன் தனக்கு ஞானத்தை உபதேசிக்கும்படி விதுரரை வேண்டினான். அவரும் அதற்குத் தனக்கு அதிகாரமில்லையென்று ஸனத்குமாரரை த்யானிக்க, அவர் அங்கே வந்து திருதராஷ்ட்ரனுக்கு ஆத்மஞானத்தை உபதேசித்தார். அதே பாரதத்தில் விதுரப்ரஜாகரமென்றும், ஸனத்ஸுஜாதீயமென்றும் பெயருள்ளது.—(பாரதம் உத்யோகபர்வம் 41-46). ஸனத்குமாருடைய பெயரால் ஓர் ஸம்ஹிதை வழங்குகிறது.

ரிச்யசிருங்கர்:—இதற்கடுத்த (8-வது) ஸாவர்ணிமன்வந்தரத்தில் ஸப்தர்ஷிகளில் ஒருவர்—(பாகவதம் VIII. 13).

ரிக்வேதம் X. 136-வது ஸூக்தம் இவரால் செய்யப்பட்டது.

இவர் மானுடைய முகமும் ஒற்றைக்கொம்புமுள்ளவர்—(கம்பராமாயணம் 10).

காச்யபருடைய புத்ரரான விபாண்டகர் ஒருநாள் ஒரு பெரிய ஏரியின் ஜலத்தில் மூழ்கி அநேககாலம் கடுமையான தபஸ்செய்து கொண்டிருந்தார். ஒருஸமயத்தில் அங்கே ஜலக்ரீடை செய்ய வந்த ஊர்வசியென்னும் அப்ஸரஸைக்கண்டு அவர் மோகங்கொள்ள, அவருடைய இந்த்ரியம் வெளிப்பட்டது. அங்கே நீர்குடிக்க வந்த ஓர்மான் ஜலத்துடன் அதை உட்கொண்டு உடனே கர்ப்பந்தரித்தது. அதற்கு மகாதேஜஸ்வியான ஓர் புத்ரன் பிறந்தான். அந்த மான் பூர்வஜன்மத்தில் தேவகன்யையாயிருந்து ப்ரஹ்மதேவரால் மானாகும்படி சபிக்கப்பட்டாள். பிறகு அவரை ப்ரார்த்திக்க, அவரும் "நீ அந்த ஜன்மத்தில் ஓர் ரிஷியைப் புத்ரனையடைந்து முன்சாபத்திலிருந்து விடுபடுவாய்" என்று அநுக்ரஹித்தார்.

ரோமபாதனென்ற அங்கதேசத்தரசன் ஒருஸமயத்தில் ஒரு ப்ராஹ்மணனிடத்தில் பொய் சொன்னதற்காக அவனுடைய தேசத்திலிருக்கும் ப்ராஹ்மணர்கள் அவனைத் தள்ளிவைத்தார்கள். அவனுடைய வைதிகக்ரியைகளுக்கு ஒரு ப்ராஹ்மணனும் போகிறதில்லை. தேவேந்த்ரன் அவனுடைய ராஜ்யத்தில் மழைபெய்வதை நிறுத்திவிட்டான். அதனால் அவனுடைய ப்ரஜைகள் மிகவும் கஷ்டப்பட, அவன் சிலமுள்ள ப்ராஹ்மணர்களையழைத்து, "மழை பெய்யும்படி செய்வதெப்படியே" என்று கேட்டான். அவர்களும் யோசித்து, "அரசனே! ப்ராஹ்மணர்களெல்லோரும் உன்னிடத்தில் கோபங்கொண்டிருக்கிறார்கள். எப்படியாவது அவர்களை ஸமாதானப்படுத்தும். மேலும், மஹாத்மாவான ரிசயசிருங்கரிஷி உம்முடைய ராஜ்யத்தில் அடிவைத்தால் உடனே மழைபெய்யும்" என்றார்கள். அதைக்கேட்டு அரசன் தேசத்திற்கு வெளியில் சென்று கடுமையான ப்ராயச்சித்தங்களை அநுஷ்டித்து ப்ராஹ்மணர்களைத் திருப்திசெய்து தன் ராஜ்யத்திற்குள் வந்தான். பிறகு மந்த்ரிகளுடன் ஆலோசித்துத் தாஸிகளால் அந்தக் காரியத்தை முடிக்க நிச்சயித்து அவர்களை வருவித்தான்.

அவர்களில் மிகவும் வயஸ்சென்ற ஒருத்தி, "நான் போய் அவரையழைத்துக்கொண்டுவருகிறேன். எனக்கு வேண்டிய ஸாமான்களை உத்தரவுசெய்யுமெ"ன்றாள். அரசனுமப்படியே செய்ய, அவள் மிகவும் அழகுபொருந்திய அநேக யௌவனஸ்த்ரீகளைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு வனத்திற்குச் சென்று, ஆச்ரமம் போல் அலங்கரிக்கப்பட்ட ஒரு தெபபத்தைத் தயார்செய்து, ரிஷ்யசிருங்கருடைய ஆச்ரமத்திறகு ஸமீபத்தில் அதைக்கட்டி விட்டு, அவர் வெளியில் ஸஞ்சரிக்கும் காலங்களையும் ஸ்தலங்களையும் சிலரையனுப்பித் தெரிந்துகொண்டாள்.

ஒருநாள் அதிக புத்திசாலியான தன் பெண்ணைச சில யுக்திகளையுபதேசித்து அனுப்பினாள். அவளும் அந்த ரிஷியின் ஆச்ரமத்திற்குச் சென்று, ரிஷ்யசிருங்கரைக்கண்டு, "மஹர்ஷே! இவ்விடத்தில் வஸிக்கும் தபஸ்விகள் எலலோரும் க்ஷேமமா? தங்களுக்குப் பழம் கிழங்கு வேர் முதலிய பதார்த்தங்கள் குறைவில்லாமல் கிடைக்கின்றனவா? இந்தஸ்தலம் தங்களுக்குத் திருப்தியாயிருக்கிறதா? இவ்விடமிருக்கும் தபஸ்விகளுடைய தபஸ் விருத்தியாகிறதா? தங்களுடைய பிதாவின் புண்யம குறையாமல் அவர் தங்களிடத்தில் ப்ரீதியுடனிருக்கிறாரா? தங்களுககுசிதமான வித்யைகளையும் க்ரியைகளையும் அனுஷ்டித்துவருகிறீர்களா?"வென்று விசாரித்தாள். அதற்கு ரிஷ்யசிருங்கர், "மஹாமுனியே! தாங்கள் தேஜோமயமாய் ப்ரகாசிக்கிறீர்கள். பூஜிக்கத்தகுந்தவர்கள். என் வர்ணாச்ரமதர்மப்படி அர்க்யபாத்யம் ஆஸனம் பழங்கள் கிழங்கு முதலியவைகளை இதோ ஸமர்ப்பிக்கிறேன். கறுப்பு மான்தோலால் மூடப்பட்டு உட்காருவதற்கு மிருதுவாயும் ஸுகமாயுமிருக்கும் இந்த தர்ப்பாஸனததில் தாங்கள் உட்காரவேண்டும். தங்களுடைய ஆச்ரமம் எங்கே? தாங்கள் தேவர்களைப்போல் விளங்குகிறீர்கள். தாங்கள் இப்பொழுது அனுஷ்டித்துவரும் வ்ரதமென்ன?"வென்று கேட்டார். அதற்கு அந்தத் தாஸி, "காசயபபுத்ர! அதோ தெரிகிற மலைக்குப் பின் இங்கிருந்து மூன்றுயோசனை தூரத்தில் என் ஆசரமமிருக்கிறது. அது வெகு அழகான ஸ்தலம். தங்களைப்போன்றவர்களிடத்தில் உபசாரம்பெறுவது என் தர்மத்திற்கு விரோதம். நான் தங்களுக்கு உபசாரம் செய்யவேண்டும். இப்பொழுது நான் அனுஷ்டித்துவரும் வ்ரதமென்னவென்றால், தங்களை என் கைகளால் ஆலிங்கனஞ்செய்வதுதானெ"ன்றாள்.

ரிஷ்யசிருங்கர், "இந்த வனத்தில் கிடைக்கும் அபூர்வமான பழங்களைத் தங்களுக்கு இதோ கொண்டுவந்திருக்கிறேன். தயவு செய்து பெற்றுக்கொள்ளவேண்டுமே" என்று ப்ரார்த்திக்க, அந்தத் தாஸி அவைகளை விட்டெறிந்து, அவருக்குத் தகாத பதார்த்தங்களைப் புஜிப்பதற்குக் கொடுத்தாள். அவை அவருக்கு மிகவும் ருசியாயிருந்தன. மேலும், மகாபரிமளமுள்ள அநேக மாலைகளையும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் மேன்மையான பானங்களையும் அவருக்குக் கொடுத்து, அவருடன் சிரித்து விளையாடினாள். பிறகு அவருக்கெதிரே ஒரு பந்தை வைத்துக்கொண்டு தாவிக்குதித்துத் தன் அவயவங்களின் அழகை அவருக்குக் காட்டினாள். பிறகு அவரை அடிக்கடி ஆலிங்கனஞ்செய்து ஆசையுடன் பார்த்து, "அக்னிஹோத்ரஞ்செய்யும் வேளையாயிற்றே" என்று சொல்லி அவ்விடம்விட்டு ஓடிப்போனாள்.

ரிஷ்யசிருங்கர் அவளிடத்தில் மிகவும் ஆசைகொண்டு, புத்தி மயங்கி, இந்த்ரியங்கள் ஸ்வாதீனமில்லாமல், அவளை நினைத்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் அவருடைய பிதா விபண்டகமஹர்ஷி அங்கே வந்தார். அவருடைய கண்கள் ஸிம்ஹத்தினுடைய கண்களைப்போல் மஞ்சளாயிருந்தன. தேஹம் முழுவதும் மயிரால் மூடப்பட்டிருந்தது. தன் புத்ரன் தனியே உட்கார்ந்து மிகவும் கவலையுடன் பெருமூச்சுவிட்டுக்கொண்டு புத்திகெட்டிருப்பதைக் கண்டு "குழந்தாய்! நீ இன்று செய்யவேண்டிய ஸமித்தாதானத்தைச் செய்தாயா? ஸ்ருக் ஸ்ருவம் முதலிய பாத்ரங்களைத் தேய்த்துவைத்தாயா? கன்றுக்குட்டியை ஊட்டவிட்டுப் பால் கறந்தாயா? ஏன் விறகுபிளக்கவில்லை? எப்பொழுதும்போல் உன் மனஸ் சாந்தமாயிருக்கக் காணோம். ஏதோ கவலைகொண்டு புத்திமயங்கியிருக்கிறாய். ஏன் இவ்வளவு விசாரம்? இன்றைக்கு இங்கே யார் வந்தார்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ரிஷ்யசிருங்கர், "ஸ்வாமி! இன்றைக்கு இங்கே ஓர் ப்ரஹ்மசாரி வந்தார். அவருடைய தலைமயிர் நீண்டும் சுருண்டும் அடர்த்தியாயும் கறுப்பாயுமிருந்தது. தேஹம் தங்கநிறமாயும் மஹாகாந்தியுள்ளதாயுமிருந்தது. கண்கள் தாமரைமலர்போல் அழகாயும் விஸ்தாரமாயுமிருந்தன. ஸூர்யனைப்போல் ப்ரகாசமாயும் தேவதையைப்போல் அழகாயுமிருந்தார். தலைமயிர் அழ

காய்ப் பின்னப்பட்டுத் தங்கக் கயிறுகளால்கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது. அதிலிருந்து உத்தமமான வாஸனை வீசிற்று. கழுத்தில் மின்னலைப்போல் ப்ரகாசிக்கும் ஒரு ஆபரணம் தொங்கிற்று. அவருடைய மார்பு கொஞ்சங்கூட மயிரில்லாமல் உயர்ந்து மிருதுவாயும் அழகாயுமிருந்தது. இடுப்பு அதிக நுட்பமாயும் வழவழுப்பாயுமிருந்தது. வஸ்த்ரத்தின் கீழிருந்து என் முஞ்சிக் கயிறுபோல் ஒரு தங்கக்கயிறு தொங்கிற்று. பாதங்களிலும் மணிக்கட்டுகளிலும் அபூர்வமான ஏதோ சில ஆபரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அவை என் ஜபமாலையைப்போலிருந்தன. அசையும்பொழுது அவை ஹம்ஸபக்ஷிகள் ஜலத்தில் நீந்தும்போது இனிமையாய்க் கூவுவதுபோல் ஸுகமாய்ச் சப்தித்தன. அவர் தரித்துக்கொண்டிருந்த வஸ்த்ரங்கள் என் மரவுரியைவிட நேர்த்தியாயும் மிருதுவாயும் விசித்ரமாயுமிருந்தன. குரல் ஆண் கோகிலத்தின் ஸ்வரத்தைப்போல் மதுரமாய் என் ஹிருதயத்தை மயக்கிற்று. தலைமயிர் நெற்றியிலிருந்து இரண்டு பங்காய்ப் பிரிக்கப்பட்டு தலையில் ஒட்டிக்கொண்டிருந்தது. கண்கள் அழகான இரண்டு சக்ரவாகபக்ஷிகளால் மறைக்கப்பட்டிருந்தன. அவருடைய உள்ளங்கையில் நான் இதுவரையிலும் பார்த்திராத ஒரு அழகான பழத்தை வைத்துக்கொண்டு, அதைப் பூமியில் அடிக்கடி அடித்து ஒவ்வொருதடவையும் பூமியிலிருந்து உயரமாய்க் கிளம்பும்படி செய்தார். அது வெகு ஆச்சர்யகரமாயிருந்தது. அப்பொழுது காற்றால் அலைக்கப்பட்ட கொடிபோல் அவர் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார். தேவகுமாரனைப்போன்ற அவரைப் பார்க்கும்போது எனக்குண்டான ஸந்தோஷத்திற்கு அளவில்லை. அவர் என்னிடத்தில் அர்க்யம், பாத்யம், பழம், கிழங்கு முதலிய உபசாரங்களைப் பெற்றுக்கொள்ளமாட்டேனென்றும், அதுதான் தன் வ்ரதமென்றும் சொன்னார். பிறகு எனக்கு அநேகம் பழங்களைக் கொடுத்தார். அவை இந்த வனத்திலகப்படும் பழங்களைப்போலில்லை. அவைகளுக்கு மேல் ஓடாவது உள்ளே கொட்டையாவது இல்லை. ஆச்சர்யகரமான ருசியுள்ள ஒருவித தீர்த்தத்தை எனக்குக் குடிக்கக் கொடுத்தார். அதைக் குடித்துச் சொல்லமுடியாத ஆநந்தமடைந்தேன். பூமி சுற்றுகிறதுபோலிருந்தது. தங்கக்கயிறுகளால் பின்னப்பட்டு மிகவும் வாஸனையுள்ள மாலைகளைக் கொடுத்திருக்கிறார்; பாருங்கள். அவர் இவ்விடம்விட்டுப் போனதுமுதல் என்

ஹ்ருதயம் தபிக்கிறது. என் தேஹம் எரிகிறது. கூடிய சீக்ரத்தில் அவரிடம் போய் அவரை ஒவ்வொருநாளும் இங்கே வரும்படி ப்ரார்த்திக்கவேண்டுமென்று எனக்கு ஆவலாயிருக்கிறது. நான் இப்பொழுதே போகும்படி எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும். அவர் அனுஷ்டிக்கும் வ்ரதத்தை நானுமனுஷ்டித்து அவரைப் போல நானுமாகவேண்டும். நான் அவரைப் பார்க்காவிட்டால் மனஸ் மிகவும் வருத்தப்படுமெ"ன்றார்.

விபாண்டகர், "குழந்தாய்! இவர்கள் ராக்ஷஸர்கள். நிகரில்லாத பலமும் அழகும் பொருந்தினவர்கள். மதுரமான ரூபத்தைத் தரித்துக்கொண்டு வனங்களில் ஸஞ்சரித்துத் தபஸ்விகளை அநேகவிதமாய் மயக்கி, அவர்களுடைய தபஸைக் கெடுப்பார்கள். இதுவரையில் அநேகம் ரிஷிகளும் தபஸ்விகளும் அவர்களால் மயக்கப்பட்டுத், தாங்கள் தபஸால் ஸம்பாதித்த புண்யலோகங்களையிழந்திருக்கிறார்கள். இந்த்ரியங்களையடக்கினவனும் புண்யாத்மாக்கள் அடையும் லோகங்களையடைய விரும்புகிறவனுயுமிருக்கிற ரிஷி அவர்களுடைய ஸமீபத்தில் போகக்கூடாது. அவர்களைப் பார்க்கவுங்கூடாது. அவர்கள் உனக்குக்கொடுத்த பானம் ஸாதுக்கள் குடிக்கத்தகுந்ததல்ல. அவை துஷ்டர்களும் பாபிகளும் குடித்துப், புத்திகெட்டு வெறிகொண்டு அலையும் பதார்த்தங்கள். இந்த ப்ரகாசமான பழங்கள் நம்மைப்போன்ற தபஸ்விகளுக்குத் தகுந்ததல்ல"வென்று தன் புத்ரனை எச்சரித்து வீட்டைவிட்டு வெளியில் போகவேண்டாமென்று ஆக்ஞாபித்து, அவளைத் தேடிக்கொண்டு போனார். மூன்றுதினங்கள் அலைந்தும் அவளைக் காண முடியாமல் தன் ஆச்ரமத்திற்குத் திரும்பிவந்தார்.

இப்படியிருக்கையில், ரிஷ்யசிருங்கர் பழங்களைக்கொண்டுவருவதற்காக வெளியில் போனபோது, அந்தத் தாஸி ஸமயம்பார்த்திருந்து அவருக்கெதிரில் வந்தாள். அவளைக் கண்டவுடன் அவர் ஓடிவந்து, ஆனந்தத்துடன் "என் பிதா திரும்பிவருவதற்குள் உங்களுடைய ஆச்ரமம் போவோம் வாருமெ"ன்றழைக்க, அந்தத் தாஸிகள் இவரை அநேகவிதமாய் ஆசைகாட்டி, ஓடத்தில் கட்டியிருக்கும் ஆச்ரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கிருந்து அங்கதேசம் போகும்வரையில் அவருடன் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அங்கே ரோமபாதர் அவரை விசேஷ உபசாரத்துடன் எதிர்கொண்டழைத்து அந்தப்புரத்தில் ஸ்த்ரீகளுக்குநடுவில் வைத்திருந்தார். ரிஷ்யசிருங்கர் அங்கதேசத்தின் எல்லையை மிதித்தவுடன் மழை தாரைதாரையாய்ப் பெய்ய ஆரம்பித்தது. அரசன் மிகவும் ஸந்தோஷித்துச், சாந்தையென்ற தன் பெண்ணை அவருக்கு விவாஹஞ்செய்துகொடுத்தார். விபாண்டகருடைய கோபத்தைத் தணிப்பதற்காக அவர் தன் பிள்ளையைத் தேடிவரும் வழியில் பசுக்களை வைத்து, வயல்களை உழும்படிசொல்லி, அங்கிருந்த பசுமந்தைகளைக் காக்கும் இடையர்களுக்கு, "விபண்டகமஹர்ஷி தன் புத்ரனைக்குறித்து உங்களைக்கேட்டால், 'ஸ்வாமி! இந்தப் பசுமந்தைகளும் வயல்களும் அவரைச் சேர்ந்தவை. நாங்கள் அவருடைய அடிமைகள். அவருடைய கட்டளைகளைச் செய்துகொண்டிருக்கிறோமெ'ன்று கைகளைக்கூப்பிக்கொண்டு வணக்கமாய்ச் சொல்லவேண்டிய"தென்று கட்டளையிட்டார்.

விபாண்டகர் வனத்தில்பழம் கிழங்கு முதலியவைகளைச் சேகரித்துக்கொண்டு தன் ஆச்ரமத்திற்குத்திரும்பிவந்து புத்ரனைக்காணாமல், மிகவும் கோபங்கொண்டு, அங்கதேசத்தரசனால் செய்யப்பட்ட தந்த்ரமென்று ஞானதிருஷ்டியாலறிந்து, அவனையும் அவனுடைய தேசத்தையும் அதிலுள்ள ப்ரஜைகளையும் எரித்துவிடுகிறதென்று தீர்மானஞ்செய்து, சம்பாநகரத்தைநோக்கி வந்தார். வழிநடப்பால் களைத்துப், பசியால் மெலிந்து, அந்த இடையர்களிருக்குமிடம் சேர்ந்தார். அவர்கள் அவரை விசேஷமர்யாதையுடன் உபசரிக்க, அன்று ராத்ரி அங்கே தங்கியிருந்தார். "நீங்கள் யாரைச்சேர்ந்தவர்க"ளென்று அவர்களைக் கேட்க, அவர்களும் ஸ்வாமி! "நாங்களெல்லாரும் தங்களுடைய புத்ரரின் அடிமைகள். இந்தத்தேசம் அவருடையது. இதெல்லாம் அவர் செய்த ஏற்பா"டென்றார்கள். இதேவிதமாய் அவர் போகும்வழியில் அநேகவிடங்களில் உபசரிக்கப்பட்டு, இப்படிப்பட்ட ப்ரியமான வார்த்தைகளைக் கேட்டார். பிறகு சம்பாநகரத்திற்குச் செல்ல, ரோமபாதர் அவரை எதிர்கொண்டழைத்து விசேஷமாய்ப் பூஜித்தார்.

அங்கே தேவேந்த்ரனைப்போல் விளங்கும் தன் புத்ரனையும் மின்னல்கொடியைப்போல் ப்ரகாசிக்கும் தன் நாட்டுப்பெண்ணை

யுங்கண்டு மிகவும் ஸந்தோஷித்து, அங்கதேசத்தரசன் தனக்குச் செய்த மர்யாதையாலும் தன் புத்ரனுக்குக் கொடுத்த க்ராமங்கள் பசுக்கள் ஆபரணங்கள் முதலியவைகளாலும் சாந்தையின் அழகாலும் கோபந்தணிந்து, ரிஷ்யச்ருங்கரை நோக்கிக், "குழந்தாய்! உனக்கு ஒருபுத்ரன் பிறந்தவுடன் ரோமபாதனுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிட்டு, வனத்திற்குத் திரும்பிவரக்கடவா யெ"ன்று ஆக்ஞாபித்துத், தன் ஆச்ரமத்திற்குச் சென்றார். ரிஷ்யச்ருங்கரும்அப்படியே செய்தார்—(பாரதம், வனபர்வம், 113).

50 - 8 கெடுதி. "ஸ்த்ரீயின் சேர்க்கையால் லோகத்தில் ப்ரஹ்மசர்யமென்று வழங்கும் ஆச்ரமத்திற்குப் பங்கம் நேரிடும்;" அல்லது "இவர்க்கு இரண்டுவித ப்ரஹ்மசர்யமும் நேரும்". அதாவது—தண்டம், அரைநூல் முதலியவைகளை அடையாளமாயுடைய ஸாதாரண ப்ரஹ்மசர்ய ஆச்ரமமும்; தன் பார்யையிடத்தில் ருதுகாலங்களில்மாத்ரம் சேர்வதென்று ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கும் ப்ரஹ்மசர்யமும் நேரும். "ஸ்த்ரீகளுக்கு 16-தினங்கள் ருதுகாலமெனப்படும். அதில் முதல் நாலு தினங்களையும் அமாவாஸ்யை பௌர்ணமியையும் விலக்கி மற்ற இரட்டைதினங்களில் சேருவதால் கிருஹஸ்தன் ப்ரஹ்மசர்ய விருதத்தையனுஷ்டித்த பலத்தையடைகிறான்—(யாக்ஞவல்க்யஸ்மிருதி).

அங்கதேசம்.—இது தற்காலத்துப் பங்காளதேசமல்ல; தசரதருடைய ராஜ்யத்திற்கு ஸமீபத்தில் ஸரயூநதியும் கங்கையும் சேருமிடத்தில் இருந்தது; தற்காலத்தில் பேஹார் என்ற தேசத்தின் ஓர் பாகமும பாகல்பூர் என்ற தேசமும் சேர்ந்தது.

11. ரோமபாதர்:—

ப்ரஹ்மா
|
அத்ரி
|
ஸோமன்=தாரை
|
புதன்=இளை
|
புரூரவஸ்

= ஊர்வசி
|
ஆயுஸ்
|
நகுஷன்
|
யயாதி
|
அநு

அநு
|
ஸபாநரன்
|
காலநரன்
|
ஜனமேஜயன்
|
மஹாசாலன்
|

மஹாமனஸ் — திதிக்ஷு — ருஷத்ரதன் — ஹேமன் — ஸுதபஸ் — பலி

பலி — அங்கன் — கல்பானன் — திவிரதன் — தர்மரதன் — சித்ரரதன்

(ரோமபாதர்)

பாகவதம்

(IX.) 23.

---

காலாநரன் — ஸ்ருஞ்ஜயன் — புரஞ்ஜயன் — ஜனமேஜயன் — மஹாசாலி — மஹாமனஸ்

மஹாமனஸ்: உசீனரன்; திதிக்ஷு — உஷத்ரதன் — ஹேமன்

ஹேமன் — ஸுதபஸ் — பலி — அங்கன் — பரன் — திவிரதன் — தர்மரதன் — சித்ரரதன் — ரோமபாதர் (அல்லது தசரதன்) — சாந்தை = ரிஷ்யசிருங்கர்

(விஷ்ணுபுராணம் IV. 18)

24. உபாயம். சுத்தமான ப்ரஹ்மசாரிக்குக் கன்னிகையை விவாஹம் செய்துகொடுப்பதே சரேஷ்டமான ப்ராயச்சித்தம். அதே உபாயம்.

32. யாதொரு கெடுதியும். ரிசயசிருங்கருடைய ப்ரஹ்மசர்ய வ்ரதத்திற்கு யாதொரு கெடுதியும் நேராது; தாங்கள் அதைப் பற்றி ஸந்தேஹப்படவேண்டாம்; தாஸிகளுடைய ஸம்பந்தம் அவருக்கில்லாமலேயே அவரையழைத்துவருகிறோம். அல்

லது, விபண்டகமஹர்ஷியின் சாபமென்று வெளியிட்டேனோ; அல்லது, மழையில்லாமல் வருத்தப்படுவதென்று கெடுதிநேராது.

51. 1. சாந்தையை:—சாந்தை தசரதருக்குப் பிறந்த கன்யை; ரோமபாதருக்கு ஸ்வீகாரமாய்க் கொடுக்கப்பட்டவள்.

7. கேட்டார்:—இங்கே ஸர்க்கத்தை முடித்தது மூலத்தை எழுதினவர்களுடைய பிசகென்று தோன்றுகிறது—கோவிந்தராஜீயம்.

14-ஸ்வரூபத்தையாவது:—புராண இதிஹாஸங்களின் மூலமாயும் ஸ்த்ரீஸ்வரூபத்தை அறியார். சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களின் ஸுகமென்பதே அவருக்குத் தெரியாது.

29. ஆச்ரமத்திலேயே:—உமது தேசத்தின் எல்லையிலிருக்கும் சிருங்கபேரபுரத்தைச் சேர்ந்த காட்டிலுள்ள.

53-27. ஆ:—வேசையைகளைத் தொட்டதாலும் அவர்கள் கொடுத்த பதார்த்தங்களைப் புஜித்ததாலும் ரிச்யசிருங்கருடைய தபஸ் குறையாதா? அவர் ராஜ்யத்தில் வந்தவுடன் எப்படி மழை பெய்தது?

ஸ:—ஸ்த்ரீஸ்வரூபத்தையே அறியாதவராதலால் ஹானியில்லை. அப்படிக் கொஞ்சம் தோஷமிருந்தாலும் தபோமஹிமையால் அது எரிக்கப்பட்டது.

ஆ:—இவர் தோஷமற்ற ப்ரஹ்மசாரி; ஸகல வேதங்களையும் சாஸ்த்ரங்களையுமறிந்தவர்; அவைகளால் ஸ்த்ரீஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டவர்; ப்ரஹ்மசர்யத்திற்கும் ஸ்த்ரீகளுக்கும் விரோதமென்று அவருக்குத் தெரியாதோ? வனங்களில் வஸிக்கும் ஸ்த்ரீகளைப் பார்த்ததில்லையா? ஒன்றுந்தெரியாதவராயிருந்தால் வேத சாஸ்த்ரஞானமேது? தபஸ்செய்யச் சக்தியேது? அனுக்ரஹிக்கச் சக்தியேது?

ஸ:—இவர் ப்ரஹ்மக்ஞானி; ஸகல ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மஸ்வரூபமாய்ப் பார்ப்பவர்; இவருக்குக் கொஞ்சமாவது தோஷம் ஏற்பட ந்யாயமில்லை. ப்ராரப்தவசத்தால் தனக்கு ராஜகன்யையுடன் விவாஹம் நேருமென்றறிந்து, தன்னையழைக்கவந்த தாஸிகளுக்குட்பட்டு, அவர்கள் பயப்படாமலிருக்கும்படி ஒன்றுந் தெரியாதவரைப்போல் பேசினர். இதையறிந்த அவருடைய பிதாவும் ரோமபாதனையாவது அவரையாவது சபிக்கவில்லை.

ஏதனால் ப்ரஹ்மஜ்ஞானிக்கு எவ்விதத்திலும் தோஷமேற்படாதென்றும், அவனுக்கு ஒரு பதார்த்தத்தைத் தானஞ்செய்ய நினைத்த மாத்ரத்தில் எல்லாக்கார்யங்களும் கைகூடுமென்றும் தெரிகிறது —திலகம்.

54-10. ஸாமர்த்யமுள்ளவர்:—'புத்ரன் பிறந்து தலைமயிர் கறுத்திருக்கும்பொழுதே அக்னிகளை உபாஸிக்கவேண்டியது,' என்ற விதிப்படி அக்னிஹோத்ரியர்களபடியால் ரித்விக்காகவிருக்கத் தகுந்தவர்.

56-1. இப்படித் தசரதர் ஸகல ஐச்வர்யஸம்பன்னனும் ஸகல மனோரதங்களையும் பூர்த்திசெய்தவருமாயிருந்தும், தன் வம்ச விருத்திக்கு ஹேதுவான புத்ரனில்லாமல் வருத்தமடைந்து, அதற்குக் காரணமான பாபங்களைப் போக்குவதற்கு அச்வமேதயாகஞ் செய்வதைத்தவிர வேறு உபாயமில்லையென்று கண்டு, 'அச்வமேத யாகஞ்செய்கிறவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான்; ப்ரஹ்மஹத்யாதோஷத்திலிருந்து விடுபடுகிறானென்ற ச்ருதிப்படிக்கும், ஸார்வபௌமன் 'அச்வமேதயாகம் செய்யவேண்டியதென்ற ஸ்ம்ருதிப்படிக்கும் அந்த யாகத்தைச் செய்ய நிச்சயித்தார். ஸுமந்த்ரர் பூர்வவிருத்தாந்தத்தைத் தெரிவித்தபிறகு, தன் பெண்ணையும் மருமகனையும் உபசரித்து ஆதரிக்கிறதென்ற காரணத்தை வைத்துக்கொண்டு ரிஷ்யச்ருங்கரையும் சாந்தையையும் அயோத்யைக்கு வருவித்தார். பிறகு வஸந்தருது ஆரம்பித்தவுடன் அச்வமேதயாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

ஸர்க்கங்கள் 12, 13, 14ல அச்வமேதயாகத்தைப்பற்றின விஷயங்கள் யாவும் உத்தரகாண்டம், 91, 92, ஸர்க்கங்களின் கோட்டுகளில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகின்றன.

58-15. ஸ்ருக்:—மரத்தால் செய்யப்பட்ட கரண்டி;

ஸ்ருவம்:—இரண்டு தலைகளுள்ள மர அகப்பை.

சமஸம்:—சதுரமான மரத்தொன்னை; இவைகளுக்குப் பிடிகளுமுண்டு.

17. ரஸாபினயம்—பாவாபினயம்:—முகம், நேத்ரங்கள், உதடுகள், புஜங்கள், மார்பு, கால்கள் முதலிய அங்கங்களின் சேஷ்டைகளால் ரஸங்களையும் ஹ்ருதயத்தில் தோன்றும் எண்ணங்களையும், தெளிவாய்க் காட்டுதல்.

18. ச்ரௌதப்ரயோகம்:—வேதத்தில் விதிக்கப்பட்ட யாகயக்ஞங்களைச் செய்யும் முறை.

59-21. காசி:—புரூரவஸின் மூத்தபுத்ரனான ஆயுவென்பவனுடைய வம்சத்தில் பிறந்த க்ஷத்ரவிருத்தனுடைய ஸந்ததியார் காசிதேசத்தில் ஆண்டுவந்தார்கள். அவர்களில் சௌனகரிடத்திலிருந்து நான்கு வர்ணத்தார் பிறந்தார்கள். தீர்க்கதமஸின் புத்ரனான தந்வந்த்ரியென்பவர், அமிருதத்திற்காக ஸமுத்ரத்தைக் கடைந்தபொழுது அதிலிருந்து உண்டானவர். ஒவ்வொரு ஜன்மத்திலும் மனிதர்களுக்குரிய தோஷங்களும் துக்கங்களுமற்று ஸர்வக்ஞராயிருந்தார். முன் ஜன்மத்தில் நாராயணன் அவருக்குக் கொடுத்த வரத்தால் காசிராஜாக்களுடைய வம்சத்தில் பிறந்து, ஆயுர்வேதத்தை வெளிப்படுத்தி உபதேசித்து, வைத்யக்ரந்தங்களைச் செய்தார். தேவதைகளைப்போல் யாகயக்ஞங்களில் இவருக்கும் ஒரு பாகமுண்டு. கௌஷீதகி உபநிஷத் III. 1லும், ப்ரஹ்மஸூத்ரம் 1. 29லும், இந்த்ரனால் ப்ரஹ்மவித்யையை உபதேசம் பெற்ற ப்ரதர்தனன் இந்த வம்சத்தரசன். அலர்க்கன் என்றவேறொரு அரசன் லோபாமுத்ரையின் அனுக்ரஹத்தால் 66,0 0 வருஷங்கள்வரையில் ஆண்டுவந்தான். ஒரு ப்ராஹ்மணனுக்காகத் தன் நேத்ரங்களைப் பிடுங்கிக்கொடுத்த மஹாதாதா இவனே. (விஷ்ணுபுராணம் IV. 8).

28. ஸௌராஷ்ட்ரம்:—ஸௌராஷ்ட்ரதேசம் தற்காலத்தில் ஸூரத் 'Surat' என்ற நகரத்தைச்சுற்றி இருக்கலாம். (விஷ்ணுபுராணம் II. 3).

தற்காலத்தில் கட்டிவாரென்று வழங்கும் ஸ்தலம். நமது பூர்வக்ரந்தங்களில் ஆனர்த்தம் அல்லது ஸுராஷ்ட்ரமென்று சொல்லப்படுகிறது. "ஹர்யச்வன் அந்த உத்தமமான பர்வதத்தில் தன் ராஜதானியை ஏற்படுத்தினான். அதற்கு ஆனர்த்தமென்று பெயர். பசுக்களும் தனமும், நிறைந்த ராஜ்யம். (ஸுராஷ்ட்ரம்)—"ஹரிவம்சம் 5168—9. "அர்ஜுனன் பிறகு ஆனர்த்தமென்ற நகரத்திற்குப் போய், அங்கே த்வாரகையில் க்ருஷ்ணன் தன் அந்தப்புரத்தில் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டானெ"ன்று பாரதம்—உத்யோகபர்வம் VII-6-7ல் சொல்லப்படுவதால், ஆனர்த்தத்திற்கு த்வாரகையென்றும், வனபர்வம் 183ல் க்ருஷ்ணிபுரமென்றும் சொல்லப்படுகிறது. புருஷோத்தமருடைய த்ரிகாண்டசேஷத்தில்

அதற்கு த்வாராவதி, வனமாலினீ, அப்திநகரீ என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தற்காலத்து த்வாரகையென றெண்ணுவது பிசகு. விஷ்ணுபுராணம் V. 38-39ல் த்வாரகை ஸமுத்ரத்தால் மூடப்பட்டதென்று சொல்லியிருக்கிறது. அது தற்காலத்து த்வாரகைக்குத் தென்கிழக்கில் 95-மைல்தூரத்திலுள்ள மதுபுரத்திற்கு ஸமீபத்திலிருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஹேமசந்த்ரகோசம் IV. 97லும், மாகம். IV 1லும் த்வாரகை உஜ்ஜயந்த மென்ற ரைவதகபர்வதத்திற்கு ஸமீபத்திலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. கர்ணபரம்பரையான விருத்தாந்தத்தாலும் கல்வெட்டுகளாலும் உஜ்ஜயந்தமென்பது தற்காலத்து கிரினாரென்ற மலையென்று தெரிகிறது. மதுபுரம் கிரிநாருக்கு ஸமீபத்திலிருக்கிறது.—பூர்விக ஆர்யபூகோளம்.

ஸிந்து ஸௌவீரம் என்ற தேசங்கள் தற்காலத்தில் ஸிந்த் (Sindh), மேற்கு ராஜபுடானா (West Rajputana) வென்ற தேசங்களாயிருக்கலாம். (விஷ்ணுபுராணம் II. 3).

ரகுவம்சம் XV 87, 88-ல் ஸிந்துதேசம் ஸிந்துநதியின் மேல் பாகங்களுக்கு இருபுறமுமுள்ள தக்ஷசிலாவென்ற தேசமென்று தெரிகிறது. கதாஸரித்ஸாகரம் 27-வது தரங்கத்தில், தக்ஷசிலா என்ற நகரம் விதஸ்தா அல்லது ஜீலம் (?) ஸுதாமாவென்ற நதிக்கரையிலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ராமாயணம் உத்தரகாண்டம் 101-வது ஸர்க்கத்தில் ஸிந்துதேசம் ஸிந்துநதிக்கு இருகரையிலுமிருந்ததாகத் தெரிகிறது. கந்தர்வதேசமும் ஸிந்துதேசமும் ஒன்றே. அமரகோசத்தில் 'கந்தர்வம் ஸைந்தவம்' என்ற பதங்கள் குதிரைகளைக் குறிப்பிடுகின்றன.

ஸௌவீரம்:—பாரதம் ஆதிபர்வம் 137-ல் ஸௌவீரர்கள் கந்தர்வதேசத்தாருடைய ஓர் கிளையென்று சொல்லப்படுகிறது. ஸிந்து ஜீலமென்ற நதிகளுக்கு நடுவில் உப்புமலையும் பர்வதத்திற்குத் தெற்கிலுள்ள தேசம் ஸௌவீரமென்று தோன்றுகிறது. ஹேமசந்த்ரகோசத்தில் ஸௌவீரர்களுக்குக் குமாலகர்களென்ற பெயர் கொடுத்திருக்கிறது.

**61-1. அதிதேசம்:**—ஒரு விதியின் எல்லையை விருத்திசெய்யும் மற்றொரு விதி.

16. திகம்பரர்கள்:—வஸ்த்ரமில்லாமல் நிர்வாணமாய் ஸஞ்சரித்துக்கொண்டு வ்ரதத்தை அனுஷ்டிப்பவர்கள்.

26. பாகசாஸ்த்ரம்:— பதார்த்தங்களின் உத்பத்தியையும் லக்ஷணங்களையும் குணங்களையும் தோஷங்களையும் ருசியையும் அவைகளைப் பக்வம்செய்யும் முறையையும் புஜிக்கும் விதிகளையும் உபதேசிக்கும் சாஸ்த்ரம். இதில் அயோத்யாசக்ரவர்த்தியான நளனும், பாண்டவர்களில் ஒருவனான பீமனும் ப்ரஸித்திபெற்றவர்கள்.

62-7. பூர்வபக்ஷம், ஸித்தாந்தம்:—சாஸ்த்ரத்தில் ஓர் விஷயத்தைப்பற்றி வாதஞ்செய்யும்பொழுது அதற்கு எதிரிகளால் சொல்லக்கூடிய ஆக்ஷேபங்கள் பூர்வபக்ஷம்; அவைகளைக் கண்டித்து ஏற்படும் முடிவு ஸித்தாந்தம்.

சாஸ்த்ரவாதங்கள்:—அதர்வவேதம் I, 34-ல் சொல்லியிருக்கும் அடியிற்கண்ட மந்த்ரம், அச்வமேதயாகஸதஸில் சாஸ்த்ரவாதஞ்செய்து ஜயிப்பதற்காக ஏற்பட்டதென்றும், சாஸ்த்ரவாதத்தில் ஜயிக்க விரும்புகிறவன் ஸதஸிற்கு வடகிழக்கிலிருந்து வரவேண்டியதென்றும், இலுப்பை இலையையாவது பூவையாவது காயையாவது பழத்தையாவது வேரையாவது மென்றுகொண்டு வரவேண்டியதென்றும், வரும்பொழுது பின்வரும் மந்த்ரத்தை ஜபிக்கவேண்டியதென்றும் கௌசிகருடைய ச்ரௌதஸூத்ரம் 38-17-ல் தாரிலருடைய வ்யாக்யானத்தில் சொல்லப்படுகிறது.

"1. இந்த ஓஷதி தேனுடன் பிறந்தது. தேனால் உன்னை வெட்டியெடுக்கிறோம். தேனிலிருந்து உண்டாகிறாய், நாங்கள் தேனையடையும்படி செய்.

2. என் நாக்கின் நுனியிலும் அடியிலும் தேன் உறைட்டும். நீ முற்றிலும் என்னெண்ணப்படி நடந்துகொள்வாய்.

3. நான் உள்ளே ப்ரவேசிப்பது மதுரமாயிருக்கட்டும். நான் ஸதஸிலிருந்து வெளியில் போவதும் மதுரமாயிருக்கட்டும். நான் பேசுவதெல்லாம் கேட்பவர்களுடைய காதில் மதுரமாயிருக்கட்டும். நான் பார்ப்பவர்களுக்கு மதுரமாய்த் தோன்றட்டும். மதுவைக்காட்டிலும் நான் மதுரமானவன். மதுவுண்டாகும் மரத்தைக்காட்டிலும் நான் மதுரமானவன். தேனொழுகும் கிளையைக் கண்டு ஆசையைப்படுவதுபோல் என்னைக்கண்டு நீ மோஹிக்கக்கடவாய்".

9. நம்பப்பஸ்தநம்:—தர்ப்பைபகளை அனைகளுக்கேற்பட்ட ஸ்தானங்களில் தருந்த மந்த்ரங்களுடன் பரப்புவது.

63-2. ஸப்தர்ஷிகள்:—மரீசி, வஸிஷ்டர், அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது என்று ஏழு.

ஸப்தர்ஷிமண்டலம் அடியில் கண்ட ரூபமாய் ஆகாசத்தில் காணப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | | × |
| × | × | | 1 |
| × | × | × | × |
| 7 | 4 | 3 | 2 |

(பாகவதம் XII. 2.)

64-11 ப்ரஹ்மதேவனால்:—ப்ராஜாபதி அச்வமேதத்தை வெளியிட்டார்—ச்ருதி.

65-10. இப்படிப் புத்ரோத்பத்திக்கு இடையூறான ஸகல பாபங்களையும் நிவாரணஞ்செய்யத்தகுந்த அச்வமேதத்தைச் செய்து, பகவானுடைய அங்கங்களான ப்ரஹ்மாதிதேவதைகளை ஆராதனஞ்செய்தார். பிறகு தனக்குப் புத்ரனுண்டாவதற்குக் காரணமான ஓர் க்ரதுவைச்செய்து அதின்மூலமாய் பகவானை ஆராதிக்கவேண்டுமென்ற ஸுமந்த்ரருடைய வார்த்தையை ஞாபகப்படுத்திக்கொண்டு கேட்டார்.

19. இந்த ஸர்க்கத்தில், தசரதருடைய ப்ரார்த்தனையை வெளிப்படையான காரணமாய் வைத்துக்கொண்டு, ஸாதுக்களை ரக்ஷிப்பதற்காகப் பூமியில் பகவான் மனுஷ்யாவதாரமெடுக்க உத்தேசித்ததும், அப்பொழுது துஷ்டர்களை நாசஞ்செய்து தங்களுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணவேண்டுமென்று தேவதைகளால் ப்ரார்த்திக்கப்படுகிறதும் சொல்லியிருக்கிறது.

25. அதர்வணவேதத்தில்:—எட்டுவிதமான மண்களால் செய்யப்பட்ட எட்டு கபாலங்களில் பக்வஞ்செய்த புரோடாசத்தை [illegible] த்வம் ஸோஸிருதே ஜாதவேதோ லோகம் அக்னே [illegible] போனம்—அவிளம் ஸபுத்ரிணம் வீரவந்தம் கோமந்தம்ரயிம் நசே [illegible] வென்ற மந்த்ரத்தை ஜபித்து [illegible] [illegible] [illegible] 2-வது காண்டம் [illegible]

காலாவது அநுவாகத்தில் புத்ரேஷ்டியை அடியிற்கண்டபடி வர்ணித்திருக்கிறது. "தன்க்குப் புத்ரஸந்ததியுண்டாகவேண்டுமென்று விரும்புகிறவன் அக்னிதேவதைக்கு எட்டுக்கபாலங்களிலும் இந்த்ரனுக்குப் பதினொருகபாலங்களிலும் புரோடாசத்தை ஆஹுதிசெய்யவேண்டியது. அக்னி யஜமானனுக்குப் புத்ரனைக் கொடுக்கிறன்; இந்த்ரன் ப்ரஜைகளை விருத்திசெய்கிறன்.

அதர்வணவேதம் III. 23-ல் சொல்லப்பட்ட அடியிற்கண்ட மந்த்ரம், புத்ரன் பிறப்பதற்காக ப்ரயோகிக்கப்படவேண்டுமென்று கௌசிகஸூத்ரம் 35-3 ல் விதிக்கப்படுகிறது.

" 1. எந்தக்காரணங்களால் நீ மலடியாயிருக்கிறாயோ அந்தக் காரணத்தை உன்னிடத்திலிருந்து நீக்கிவிடுகிறோம். அதை உனக்கு வெகுதூரத்தில் கொண்டுபோய் விட்டோம்.

2. அம்பறையில் பாணம் வந்து ப்ரவேசிப்பதுபோல் உன் கர்ப்பத்தில் ஒரு புத்ரன் ப்ரவேசிக்கட்டும். பத்து மாஸங்களுக்குப் பிறகு உனக்கு ஒரு வீரன் பிறக்கட்டும்.

3. ஒரு புத்ரனைப் பெறு. அவனுக்குப்பிறகு வேறொரு புத்ரனுண்டாகட்டும். அவர்களுக்கும் புத்ரர்களுண்டாகட்டும்.

4. விருஷபங்கள் பசுக்களிடத்தில் கன்றுகளை உண்டாக்குவது போல் நீயும் ஓர் புத்ரனை உண்டாக்கக்கடவாய். அநேக கன்றுகளைப் பெறும் பசுவைப்போல நீயும் எண்ணிறந்த ப்ரஜைகளைப் பெறக்கடவாய்.

5. உனக்காக இந்த ப்ரஜாபதி இஷ்டியைச் செய்கிறேன். உன் கர்ப்பத்தில் ஓர் புத்ரன் வரட்டும். ஒருபுத்ரனையடையக்கடவாய். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். உனக்குப் பிறக்கும் புத்ரனுக்கும க்ஷேமத்திற்குக் காரணமாகக்கடவாய்.

6. எந்தத் திவ்ய ஓஷதிகளுக்கு ஆகாசம் பிதாவோ, பூமி மாதாவோ, ஸமுத்ரம் மூலமோ அந்த ஓஷதிகள் உனக்குப் புத்ரனுண்டாகும்படி அனுக்ரஹஞ்செய்யட்டும்."

அதர்வவேதம் VI. II-ல் சொல்லப்படும் அடியிற்கண்ட மந்த்ரத்தைப்புருஷன் பிறக்கவேண்டியதற்காக ப்ரயோகிக்கவேண்டியதென்றும், அரசமரத்தையும் சமீவிருக்ஷத்தையும் அரணியாகச் செய்துகடைந்து, அந்த அக்னியால் புத்ரனை விரும்பும் ஸ்த்ரீயைப்

பல விதமாய்ச் சத்திசெய்யவேண்டியதென்றும் கௌசிககல்பஸூத்ரம் 35-8-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

"1. அச்வத்தவிருக்ஷம், சமீவிருக்ஷத்தின்மேல் வறியிருக்கிறது. ஓர் புத்ரன் உண்டாகப்போகிறான். இந்த ஸ்த்ரீக்கு நாங்கள் ஓர் புத்ரனைப் பெறும் பாக்யத்தை ஸம்பாதிக்கப்போகிறோம்.

2. புருஷனிடத்தில் வளரும் வீர்யம் ஸ்த்ரீயிடத்தில் செல்லுகிறது. புத்ரனைப் பெறுவதென்பதும் அதே. ப்ரஜாபதியும் இப்படியே சொல்லுகிறார்.

3. ப்ரஜாபதியும் அனுமதியும் ஸினீவாலியும் கர்ப்பத்தை ஸ்ருஷ்டித்தார்கள். இந்த ஸ்த்ரீயின் மலட்டுத்தனத்தைத் தூரத்தில் நீக்கிவிட்டு, இவளுடையகர்ப்பத்தில் ஓர் புத்ரனை வைக்கட்டும்."

அதர்வவேதம் VII 19-ல சொல்லப்படும் அடியிற்கண்ட மந்த்ரம், புத்ரோத்பத்திக்ரியையில் ஸ்த்ரீயின்மடியில ஆஹுதி செய்யும்பொழுது ஜபிக்கப்படவேண்டுமென்று கௌசிககல்பஸூத்ரம் 35. 17-ல் சொல்லியிருக்கிறது.

"ப்ரஜாபதி இந்த ப்ரஜைகளை ஸ்ருஷ்டிசெய்கிறார். தாதா அவர்களுக்கு க்ஷேமமனைவையும் ஒற்றுமையையும் கொடுக்கட்டும். ஸகலக்ஷேமத்தையும் கொடுக்கும் தேவதை எனக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கட்டும்".

66-1. பூமிதேவி ராவணன் முதலிய ராக்ஷஸர்களுடைய அக்ரமங்களை ஸஹிக்காமல் பசுவின் ரூபத்தைத் தரித்து ப்ரஹ்மாவைச் சரணமடைந்தாள். அவர் அவளையும் தேவர்களையுமழைத்துக்கொண்டு, க்ஷீராப்தியில் ஆதிசேஷசயனத்தில் யோகநித்ரையில் கண்வளரும்மஹாவிஷ்ணுவினிடத்திற்குச் சென்று, அவரை ஸ்தோத்ரஞ்செய்து தங்களுடைய குறைகளைத் தெரிவித்தார்—அத்யாத்மராமாயணம் 2. ரகுவம்சம் X. 6.

2. ராவணன்:—இவனுடைய வம்சசரித்ரமும் உத்பத்தியும் திக்விஜயமும் சாபங்களும் தபஸும் உத்தரகாண்டத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லப்படுகின்றன. (வா-ரா-ஆரண்யகாண்டம் 32, 47, 48, 49, ஸர்க்கங்களைப் பார்க்க).

67-7. தரித்துக்கொண்டிருப்பவர்:—ப்ரக்ருதிஸம்பந்தமான குணங்களற்றுக், கல்மஷமில்லாத ப்ரபஞ்சத்தின் ஆத்மஸ்வரூபமே

கௌஸ்துபமணி ; ப்ரதானமென்ற ப்ரக்ருதியே ஸ்ரீவத்ஸமென்ற மறு ; புத்திதத்வமே கதாயுதம் ; பஞ்சபூதங்களே சங்கம் ; இந்த்ரியங்களே சார்ங்கமென்ற வில் ; மனமே ஸுதர்சனமென்ற சக்ரம் ; பஞ்சதன்மாத்ரைகளே வைஜயந்தியென்ற வனமாலையில் ஜ்வலிக்கும் ரத்னங்கள் ; அக்ஞானமென்ற உறையில் சிலகாலங்களில் மறைக்கப்பட்ட ப்ரஹ்மஞானமே நந்தகமென்ற கத்தி. இப்படியே புருஷன் ப்ரக்ருதி புத்தி அஹங்காரம் பஞ்சபூதங்கள் இந்த்ரியங்கள் மனஸ் அக்ஞானம் ஞானம் இவையெல்லாம் விஷ்ணுவின் ஸ்வரூபத்தில் ஒன்றுசேர்ந்து ஆபரணங்களாயும் ஆயுதங்களாயும் விளங்கி ஸகலப்ரஜைகளையும் ரக்ஷிக்கின்றன. (விஷ்ணுபுராணம் I. 22).

14. ஹ்ரீ ச்ரீ கீர்த்தி :—இந்த மூவரும் தக்ஷப்ரஜாபதியின் புத்ரிகள். "ஹ்ரீதேவியும் லக்ஷ்மீதேவியும் உம்முடையபார்யைகள்"—புருஷஸூக்தம்.

26. ராமன் ராவணனையும், லக்ஷ்மணன் இந்த்ரஜித்தையும், பரதன் சில துஷ்டகந்தர்வர்களையும், சத்ருக்னன் லவணாஸுரனையும் நாசஞ்செய்தார்கள்.

33. பிறந்து:—அயோத்யாபதியான அம்பரீஷமஹாராஜாவிற்கு ஸ்ரீமதியென்ற ஒரு பெண்ணுண்டு. ஒருநாள் நாரதரும் அவருடைய மருமகனை பர்வதரும் அந்த அரசனுடைய க்ருஹத்திற்கு வந்தார்கள். அவனுடைய ஸமீபத்தில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீமதியைப்பார்த்து நாரதர், "அம்பரீஷ ! இந்தக்குழந்தை யார்? ஸகல லோகங்களிலும் நான் சுற்றாதவிடமில்லை. ஆனால் இவளைப்போன்ற ரூபவதியை நான் பார்த்ததில்லை"யென்றார். அதற்கு, அம்பரீஷன், "ஸ்வாமீ! இவள் என் புத்ரி; ஸ்ரீமதியென்று இவளுக்குப் பெயர். விவாஹகாலம் ஸமீபித்தபடியால் வரனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்"என்றான். அப்பொழுது நாரதரும் பர்வதரும் அவளைப்பார்யையாயடைய விரும்பினார்கள். அரசனிடத்திலிருந்து உத்தரவுபெற்றுக்கொண்டு போகும்ஸமயத்தில் அவ்விருவரும் அம்பரீஷனைத்தனித்தனியேயழைத்து, "உன் புத்ரியை எனக்குப் பார்யையாகக்கொடுக்க வேண்டு"மென்றார்கள். அம்பரீஷன், "ஸ்வாமீ! நான் என்ன செய்வேன். தங்களைப்போலவே மற்றொரு ரிஷியும் கேட்கிறார். நீங்களிருவரும் எனக்கு வேண்டியவர்கள். உங்களில் அவள் யாரை

அபேக்ஷிக்கிறாளோ அவருக்குக் கொடுக்கிறே"னென்றான். "நல்லது, நாளைக்கு வருகிறோ"மென்று ரிஷிகள் சொல்லிப்போனார்கள்.

இருவரும் பகவத்பக்தர்கள்; ஞானிகள்; ஆனாலும் கர்மகதியை வெல்லமுடியுமோ? நாரதர் விஷ்ணுலோகத்திற்குச் சென்று பகவானை நமஸ்கரித்து நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, "ஸ்வாமீ! தாங்கள் எனக்கு ஒரு ஒத்தாசை செய்யவேண்டும். பர்வதன் நாளைக்கு இங்கே வருவான். அப்பொழுது அவனுடைய முகத்தைக் குரங்குமுகமாகச் செய்யவேண்டியது. ஸ்ரீமதிக்கு மாத்ரம் அப்படித் தோன்றவேண்டியது; அவளுக்கு அவனிடத்தில் வெறுப்புண்டாய் என்னையே விவாஹஞ்செய்து கொள்ளுவா"ளென்றார். கோவிந்தன் 'அப்படியே செய்கிறே'னென்ன, நாரதர் மிகுசந்தோஷமாய் அயோத்யைக்குச் சென்றார். உடனே பர்வதர் பகவானிடத்தில் வந்து நடந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்து, "ஸ்வாமீ! நாரதனுடைய முகம் கொண்டைமுலாங்கூலின் முகத்தைப்போலாகும்படி தாங்கள் செய்துவிட்டால் எனக்குப் பெரிய உபகாரமாகும். ஸ்ரீமதியின் கண்ணுக்கு மாத்ரம் அப்படித் தோன்றவேண்டும். நாரதனைக்கண்டு பயந்து என்னைப் புருஷனாக அடைவா"ளென்றார். பகவான் "அப்படியே ஆகட்டும்; சீக்ரம் அயோத்யைக்குச் செல்லும். இது நாரதருக்குத் தெரியவேண்டா"மென்றார்.

அம்பரீஷன் அவ்விருமுனிச்ரேஷ்டர்களும் வந்திருப்பதாகக் கேட்டு, அயோத்யையை அலங்கரித்து அவ்விருவரையும் உபசாரத்துடன் எதிர்கொண்டழைத்து, தகுந்த ஆஸனங்களில் வீற்றிருக்கச்செய்து பூஜித்தான். பிறகு ஸ்ரீமதியை ஸர்வாபரணபூஷிதையாய் ஸபாமண்டபத்திற்கு அழைத்துவந்து, "குழந்தாய்! இந்த முனிச்ரேஷ்டர்களுக்குள் உன் மனதிற்கிசைந்தவருடைய கழுத்தில் உன் கையிலிருக்கும் ஹாரத்தைப்போட்டு அவரைப் பர்த்தாவாயடைவா"யென்றான். ஸ்ரீமதி ஸமீபத்தில்வந்து மாலையைக் கையிலெடுத்து அவ்விருவரையும் உற்றுப்பார்த்துத் திகைத்துப் பேசாமல் நின்றாள். அரசன், "குழந்தாய்! ஏன் சும்மாவிருக்கிறாய்?", ராஜகன்யை, "ஸ்வாமீ! தாங்கள் சொன்னபடி நாரதர் பர்வதரென்ற முனிச்ரேஷ்டர்களை நான் காணவில்லை, யாரோ இருவர் மனுஷ்யதேஹத்தையும் குரங்கின் முகத்தையுமுடையவர்களாய் உட்

கார்ந்திருக்கிறார்கள். அவர்களைக்கண்டு எனக்குப் பயமுண்டாகிறது: அவர்களுக்கு நடுவில் ஓர் மஹாபுருஷன் 16 வயஸுள்ளவராய், ஸர்வாபரணபூஷிதராய், நீலமேகச்யாமளராய், ஆஜாநுபாஹுவாய், செந்தாமரைக்கண்ணனாய், வலது கையை நீட்டி என்னையழைப்பதைக் காண்கிறேன்". நாரதர் ஸந்தேஹங்கொண்டு, "பெண்ணே! அவருக்கு எவ்வளவு கைகளிருக்கின்றன?". ஸ்ரீமதி "இரண்டு புஜங்கள்." பர்வதர், "அவருடைய மார்பில் ஏதாவது விசேஷம் காணப்படுகிறதா? கையில் என்ன வைத்துக்கொண்டிருக்கிறார்?". ஸ்ரீமதி, "மார்பில் தேஜோமயமான மாலை விளங்குகிறது. கையில் வில்லும் பாணங்களுமிருக்கின்றன" வென்றாள். அதைக்கேட்டு அந்த ரிஷிகள், "இது எவனுடைய மாயையாயிருக்கலாம்? ஸகல மாயைகளுக்கும் இருப்பிடமான ஜனார்த்தனனே திருடன். இங்கே வந்திருப்பவன் அவனே. இல்லாவிட்டால் நமது முகங்களை இப்படி விகாரமாய்ச்செய்ய எவர்க்குமுடியும்?" என்று தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அம்பரீஷன் அவர்களை வணங்கி, "நீங்கள் ஏனிப்படி மயங்குகிறீர்கள்? என் புத்ரியை விவாஹஞ்செய்ய உத்தேசித்து வந்திருந்தால் ந்யாயமார்க்கத்தை அனுஷ்டிக்கக்கூடாதா?"வென்றான். அதைக் கேட்டு அவர்கள் கோபங்கொண்டு "கபடமான உபாயங்களை ப்ரயோகிப்பவன் நீயே; நாங்களில்லை. உன் பெண் எங்களில் ஒருவரைப் பர்த்தாவாக வரிக்கட்டு"மென்றார்கள். அம்பரீஷன் அப்படியே ஸ்ரீமதியைக் கட்டளையிட, அவள் இஷ்டதேவதையை நமஸ்கரித்து, ரிஷிகளின் சாபத்திற்குப் பயந்து, மாலையைக் கையிலெடுத்து, அந்த ரிஷிகளைப் பார்க்கையில், அவர்கள் முன்போல் விகாரரூபமுள்ளவர்களாயிருக்கக் கண்டு, அவர்களுக்கு நடுவில் விளங்கும் மஹாபுருஷனுக்கு மாலையிட்டாள். அந்த க்ஷணம் முதல் அவள் ஒருவராலும் பார்க்கப்படவில்லை. அதைக்கண்டு அங்கிருந்தவர்கள் பெருங்கூச்சலிட்டார்கள்.

பூர்வஜன்மங்களில் அவள் விஷ்ணுவையே பர்த்தாவாயடையவேண்டுமென்று கடுந்தபஸ்செய்து, ஸ்ரீமதியாய்ப் பிறந்து, தன் கோரிக்கையை நிறைவேற்றினாள். நாரதரும் பர்வதரும் மனம்நொந்து, அவ்விடம் விட்டு வைகுண்டத்துக்குச் சென்றார்கள். அவர்கள் வருவதைப்பார்த்துப் பகவான், தன் ஸமீபத்திலிருந்த ஸ்ரீமதியைச் சற்று மறைந்திருக்கும்படி சொன்னார். நாரதர்

ஹரியை நமஸ்கரித்து, "ஸ்வாமி! தாங்களிப்படிச் செய்யலாமா? என்னையும் பர்வதனையும் ராஜஸபையில் இப்படி அவமானஞ் செய்யலாமா? ஸ்ரீமதியை அபஹரிக்கக்கூடியவர்கள் தங்களைத்தவிர யா"ரென்று முறையிட்டார். பகவான் காதுகளை மூடிக்கொண்டு, "நாரத! இதென்ன! தேவர்ஷியென்று பெயரை வைத்துக் கொண்டு காமவெறிகொண்டவன்போல் பிதற்றுகிறா"யென்றார். நாரதர், அவருடைய காதில் ரஹஸ்யமாய் "எனக்குக் குரங்கின் முகம் வந்ததெப்படி?" யென்று கேட்டார். நாராயணன், "நாரத! உன்னைப்போல் பர்வதனும் என்னை ப்ரார்த்தித்தான். ஆகையால் இருவர்க்கும் முகங்களை விகாரமாய்ச் செய்தவன் நானே. நீங்களிருவரும் எனக்கு அத்யந்தபக்தர்கள். உங்களுக்குள் ஏற்றத் தாழ்வில்லை. யாரை நான் தட்டமுடியும்? என்னைப் பக்தியுடன் ப்ரார்த்திக்கிறவர்களுடைய மனோரதங்களை நிறைவேற்ற நான் கடமைப்பட்டவனல்லவா? இதில குற்றமென்ன?" வென்றார். நாரதர், "அதிருக்கட்டும். எங்களுக்கு நடுவில் கோதண்டபாணியாய் இரண்டு புஜங்களுடன் ஒரு மஹாபுருஷன் தோன்றி, ஸ்ரீமதியை அபஹரித்தான். அவன் யாரோ?"என்றார். அதற்கு வாஸுதேவன், "லோகத்தில் மஹாமாயாவிகள் கணக்கில்லாமலிருக்கிறார்கள். அவர்களில் ஸ்ரீமதியை எவனாவது கொண்டுபோயிருக்கலாம். நான் நான்கு புஜங்களையுடையவனென்பதும், சங்கசக்ரதாரியென்றும் உங்களுக்குத் தெரியாதா?"வென்றார். அதைக்கேட்டு அந்த ரிஷிகள் திருப்தியடைந்து, "வாஸ்தவந்தான். தங்களிடத்தில் கொஞ்சங்கூடத் தோஷமில்லை. தாங்கள் எல்லாரிடத்திலும் ஸமபுத்தியுள்ளவர்கள். அந்த அம்பரீஷனே இதற்கெல்லாம் மூலம். எங்களுக்குப் பெண்ணைக்கொடுக்க இஷ்டமில்லாமல் இப்படி மாயோபாயத்தைச் செய்திருக்கிறா"னென்று சொல்லிக் கேசவனிடத்தில் உத்திரவுபெற்றுக்கொண்டு அயோத்யைக்கு வந்தார்கள்

அம்பரீஷனையழைத்து, "நீ எங்களில் ஒருவருக்கு உன் பெண்ணைக் கொடுப்பதாய் ப்ரதிஜ்ஞைசெய்து, எங்களை வருவித்துப், பிறகு வேறொருவனுக்கு அவளைக் கொடுத்து மாயையால் மறையச்செய்தாய். ஆகையால் உன்னை அஜ்ஞானமான இருள் மூடக்கடவது. அதினால் உன் ஸ்வரூபமே உனக்குத் தெரியாமல் போகக்கடவதெ"ன்றுசபித்தார்கள். உடனே ஓர் பெரிய இருள் கிளம்பி அம்பரீஷனைச் சூழ்ந்துகொண்டது. அம்பரீஷனுக்குப் பகவானுல் அநுக்ர

விக்கப்பட்ட சக்ராயுதம் அதேக்ஷணத்தில் அங்கே தோன்றி அந்த இருட்டைத் துரத்த, அது அந்த மஹர்ஷிகளைப் பிடித்துக்கொண்டது. அவர்கள் அதற்குப் பயந்தோட, அவர்களை இருள் துரத்த, இருளை சக்ரம் துரத்த, ஸகலதிக்குகளிலும் அலைந்தார்கள். லோகாலோகபர்வதப்வரையிலும் ப்ரஹ்மாண்டத்தின் எல்லைவரையிலும் ஓடியும் தப்பமுடியவில்லை. 'ஐயோ! விவாஹத்திற்காசைப்பட்டுக் கைமேல் பலன் கிடைத்தது. போதும் போதுமெ"ன்று சொல்லிக்கொண்டு முடிவில் வைகுண்டஞ்சென்று விஷ்ணுஸந்நிதியில் போய், அவருடைய பாதங்களில் விழுந்து,

"ப்ரபோ! நாராயண! ஜகத்பதே! ரக்ஷியும். ரக்ஷியுமெ"ன்று கதறினார்கள். பரமதயாளுவான நாராயணன் கிருபைகூர்ந்து, அந்த இருட்டையும் சக்ரத்தையும் விலக்கி, "நாரத! பர்வத! நீங்களிருவரும் எனக்கு ப்ரியமான பக்தர்கள்; அம்பரீஷனும் அப்படியே. ஒருவருக்கும் கெடுதி நேரக்கூடாது. அவனைக் காப்பாற்றுவதற்காக என் சக்ரம் உங்களிடத்தில் அபராதஞ்செய்தது. ஸாதுவான நீங்கள் அதை மன்னிக்கவேண்டுமெ"ன்றார். அவர்கள் நடந்ததெல்லாம் விஷ்ணுவின் மாயையென்று ஊஹித்து, "ஜநார்த்தன! நாங்கள் ஆசை வைத்த பெண்ணை அபஹரித்தாய். எங்களுடைய முகத்தை விகாரமாக்கினாய். அம்பரீஷனை வீணாய்ச் சபிக்கும்படி செய்தாய். உன் சக்ரத்தையும் இருளையும் ஏவி எங்களைத் துரத்தினாய். ஆகையால் நீ எந்த ரூபத்துடன் ஸ்ரீமதியை மயக்கினாயோ அந்த ரூபத்துடன் அம்பரீஷனுடைய வம்சத்தில் பிறக்கும் தசரதனுக்குப் புத்ரனாகக்கடவாய். ஸ்ரீமதி பூமிக்குப் புத்ரியாய்ப் பிறப்பாள். விதேஹாதிபதியான ஜனகன் அவளைக் கண்டெடுத்து வளர்ப்பான். நீ மாயையால் எல்லோரையும் மோஹிக்கச்செய்து ராக்ஷஸனைப்போல ஸ்ரீமதியை அபஹரித்தபடியால் உன் பார்யையை ஒரு ராக்ஷஸன் அபஹரிப்பான். நாங்கள் விவாஹஞ்செய்யவேண்டுமென்றிருந்த ஸ்ரீமதியை எங்களுக்கில்லாமல்செய்து, மனவருத்தத்தையுண்டுபண்ணினதற்காக, நீ உன் பார்யையை விட்டுப்பிரிந்து ஹா ஹா வென்று துயரடைவாயெ"ன்று சபித்தார்கள். பகவான் புன்சிரிப்புடன், "அப்படியே ஆகட்டும். ரிஷிகளின் வார்த்தை பொய்யாகுமா? அம்பரீஷனுடைய வம்சத்தில் தசரதனென்ற தார்மிகன் பிறப்பான். நான் அவனுக்கு மூத்தபுத்ரனாய் ராமனென்றபெயருடன் அவதாரஞ்செய்வேன். என் வலதுபுஜம் பரதனாகவும் இடதுபுஜம்

சத்ருக்னனுகவும் இந்த ஆதிசேஷன் லக்ஷ்மணனுகவும் அவதரிப் பார்கள். சக்ரமே! நீ இவர்களை விட்டுவிடு. இருட்டே! நான் ராமாவதாரமெடுக்கும்பொழுது என்னை வந்தடை. அம்பரீஷனை விட்டுவிடு" என்றார். அதைக்கண்டு அந்த முனிகள் பச்சாத்தாப மடைந்து, "சீ! இன்றுமுதல் உயிருள்ளவரையில் ஸ்த்ரீயையே நினைக்கக்கூடாதே" என்று ப்ரதிக்ஞைசெய்து, தபஸிற்குச் சென்றார் கள்.—அத்யாத்மராமாயணம் IV.

த்ரேதாயுகத்தில் கௌசிகனென்ற ஓர் ப்ராஹ்மணன் கான வித்யையில் அதிக நிபுணனாய், எப்பொழுதும் விஷ்ணுவின் குணங் களை மதுரமாய்க் கானம்பண்ணிக்கொண்டிருந்தான். அதைக் கண்டு பத்மாக்ஷனென்ற ஓர் ப்ராஹ்மணன் அவனையும் அவ னுடைய குடும்பத்தையும் குறைவில்லாமல் போஷித்துவந்தான். கொஞ்சகாலத்திற்குள் கௌசிகனுடைய கீர்த்தி எங்கும் பரவிற்று. அநேக சிஷ்யர்கள் அவனை வந்தடைந்தார்கள். ஒருநாள் கலிங்க தேசத்தரசன் அவனைப் பார்க்க வந்து, மிகவும் ஆச்சர்யமடைந்து, "ஓ, கௌசிக! நீயும் உன் சிஷ்யர்களும் என்னைக்குறித் துப் பாடுங்களேன்" என்றான். "பகவானைத்தவிர வேறொருவனையும் நான் புகழ்வதில்லையே" என்று கௌசிகன் சொல்ல, வஸிஷ் டர் கௌதமர் அருணி ஸாரஸ்வதர் வைச்யர் சித்ரமாலர் சிசு வென்ற சிஷ்யர்கள் "ஓ, அரசனே! எங்களுடைய குரு சொல் வது ஸத்யமேயே" என்றார்கள். அரசன் கோபங்கொண்டு, "நீங் கள் பாடாவிட்டால் என்னுடனிருக்கும் கவிகளைக்கொண்டு பாடச் சொல்லுகிறேனே" என்றான். கௌசிகனும் அவனுடைய சிஷ்யர்க ளும் 'பகவானுடைய கல்யாணகுணங்களைக் கீர்த்தனஞ்செய்து, அவைகளைக் கேட்பதல்லாமல் இதரவார்த்தைகள் நமது செவியில் படக்கூடாதெ'ன்று மூளைகளை சிலி காதுகளில் வைத்து அடித்துக் கொண்டார்கள். வேறொருவரையும் புகழ்வதில்லையென்று நாக்கை யறுத்துக்கொண்டார்கள். அதைக்கண்டு அரசன் கோபித்து அவர் களுடைய தனங்களைப் பிடுங்கிக்கொண்டு, தேசத்திலிருந்து துரத்தி விட்டான்.

அவர்கள் இறந்தபிறகு, லோகபாலர்களும் தேவர்களும் ப்ரஹ்ம மாவின் உத்திரவால் அவர்களை விசேஷமாயுபசரித்து, ஸத்ய லோகத்திற்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அவர் அவர் களை மஹாவிஷ்ணுவின் ஸந்நிதியில் வெகு வணக்கமாய்க் கொண்டு

போய் விட, பகவான் கௌசிகனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் வெகுப்ரீதியுடன் அழைத்து ஆதரித்து, அங்கிருந்தவர்களுக்கு அவர்களுடைய மஹிமையை விஸ்தாரமாய்ச் சொல்லி, "கௌசிக! நீ என்னிடத்தில் வைத்த எல்லையற்ற பக்தியாலும் என் குணங்களை எப்பொழுதும் கீர்த்தனஞ்செய்ததாலும் பிறர்க்குப தேசித்ததாலும் திக்பாலனென்ற கணாதிபதியாய் எப்பொழுதும் என்னுடனிருப்பாய். பத்மாக்ஷ! நீ என் பக்தர்களுக்காக அளவற்ற த்ரவ்யத்தைச் செலவழித்தபடியால் தனங்களுக்கு அதிபதியான குபேரனாகக்கடவாயெ"ன்று ஆஞ்ஞாபித்தார்.

பிறகு கௌசிகனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கௌரவஞ்செய்ய விரும்பி ஓர் மஹோத்ஸவங்கொண்டாடினார். அதில தும்புருவென்பவர் அதிமதுரமாய் விஷ்ணுஸந்நிதியில் கானஞ்செய்தார். அதைக்கேட்பதற்காக மஹாலக்ஷ்மீ தன் பரிவாரங்களுடன் அங்கே வர, அவளுடைய காவற்காரர்கள் ப்ரம்ம ருத்ர மஹேந்த்ராதிதேவர்களை அப்புறம் நிலகச்செய்தார்கள். அங்கே நின்ற நாரதரை வேலைக்காரிகள் பிரம்புகளால் அடித்துத் துரத்தினார்கள். நாரதர் அந்த அவமானத்தாலும் தும்புருவிற்குச் செய்த பஹுமானத்தாலும அடங்காத கோபங்கொண்டு, மஹாலக்ஷ்மீ ஸபையிலிருந்து வெளியில் வரும்பொழுது அவளை வழிமறித்து, "நீ விஷ்ணுவின் பத்னியாயிருந்தும் ராக்ஷஸஸ்வபாவத்தையடைந்து, உன் தோழிகளையனுப்பி ப்ராஹ்மணனும் ரிஷியுமான என்னை அவமானஞ்செய்து அடித்துத் துரத்தினபடியால், ராக்ஷஸர்களுடைய வயிற்றில் பிறக்கக்கடவாய். என்னை இங்கிருந்து அடித்துத் துரத்தினது போல், உன்னை ஒரு ராக்ஷஸி ஊருக்கு வெளியில் கொண்டுபோய் எறிந்துவிடுவாளெ"ன்று சபித்தார். அதைக்கேட்டு ஸகல லோகங்களும் நடுங்கின. தேவகணங்கள் 'ஹா ஹா'வென்று கூச்சலிட்டார்கள். நாரதர் பச்சாத்தாபமடைந்து, "ஐயோ! மோசம் போனேனே. புத்திமயங்கி, கோபத்திற்கிடங்கொடுத்து ஜகன்மாதாவைச் சபித்துவிட்டேனே. பகவானுடைய க்ருபையால் அவருடைய ஸந்நிதியில் கானஞ்செய்யும் பாக்யத்தைப் பெற்ற தும்புரு என்னைவிட எவ்வளவோ மேலானவன். மஹாலக்ஷ்மீயின் கடாக்ஷத்தால் அனுகரஹிக்கப்பட்ட அந்த ஸதஸிலிருக்க யோக்யதையில்லாமல் நான் அடித்துத் துரத்தப்பட்டேனே"ன்று புலம்பிக்கொண்டிருக்கையில், லக்ஷ்மீ சபிக்கப்பட்டாளென்று புன்

டரீகாக்ஷன் கேள்விப்பட்டு அங்கே வந்தார். அப்பொழுது லக்ஷ்மீ நாரதரைக் கைகூப்பி நமஸ்கரித்து வணக்கமாய், "மஹர்ஷே! தாங்கள் சொன்ன வார்த்தை பொய்யாகாது. ஆனால் ஒரு வரம் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரண்யத்தில் வஸிக்கும் ரிஷிகளுடைய ரத்தத்தில் சொட்டுச் சொட்டாய்ச் சேர்த்துவைக்கப்பட்ட ஓர் பாத்ரத்திலுள்ள ரக்தத்தைக் குடிக்கும் ஒரு ராக்ஷஸியின் கர்ப்பத்தில் பிறக்கக்கடவேன்" என்றாள். நாரதரும் "அப்படியேயாகட்டு"மென்றார். ஷெ V. 6.

ஒருநாள் ராவணன் தண்டகாரண்யத்திற்கு வந்து, அங்கே தேஜஸால் அக்னியைப்போல் ஜ்வலிக்கும் மஹர்ஷிகளைக்கண்டு, "இவர்களை நான் ஜயிக்காமல் மூன்றுலோகங்களையும் ஜயித்தவனென்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் இவர்களைக் கொல்வதால் எனக்கு யாதொரு கீர்த்தியுமில்லை"யென்று ஆலோசித்து, அவர்களைப்பார்த்து, "நான் ஸகல லோகங்களுக்கும் ப்ரபுவாகியும் ஜயிக்கவிரும்புகிறே"னென்று, தன் பாணத்தின் நுனியால் அவர்களுடைய தேஹத்திலிருந்து ஒரு சொட்டு ரக்தத்தை எடுத்து ஒரு கலசத்தில வைத்தான். அவர்களுக்குள் கிருத்ஸமதரென்று ஒரு ரிஷிக்கு நூறு புத்ரர்களுண்டு. அவருடைய பார்யை "நமக்கு ஒரு பெண்கூடப் பிறக்கவில்லையே"யென்று வருத்தப்பட, அவர் "நான் மஹாலக்ஷ்மியைப் புத்ரியாய் அடையவேண்டுமெ"ன்று ஜபஞ்செய்து ஒரு கலசத்தில ப்ரதிதினமும் ஒரு சொட்டுப்பாலை தெளித்துக்கொண்டுவந்தார். ராவணன் அங்கே வந்த தினத்தில் அவர் ஆச்ரமத்திலிருந்து வெளியில் போயிருந்தார். தைவவசத்தால் ராவணன் அவருடைய ஆச்ரமத்திலிருந்த கலசத்தையெடுத்து ரிஷிகளுடைய ரக்தத்தை அதில் ஏந்திவைத்தான்.

பிறகு அந்தக் கலசத்தை லங்கைக்குக் கொண்டுபோய், அன்றிராத்ரி மண்டோதரியைப்பார்த்துப், "பெண்ணே! இது ரிஷிகளின் ரக்தம். கொடிய விஷத்தைக் காட்டிலும் க்ரூரமானது. இதை ஒருவருக்கும் கொடுக்கக்கூடாது; ஒருவரும் குடிக்கக்கூடாது. ஜாக்ரதையாய்க் காப்பாற்றிவையெ"ன்றான். பிறகு அவன் திக்விஜயஞ்செய்யப் புறப்பட்டுப்போய் ஒவ்வொரு தேசத்திலிருக்கும் உத்தமமான கன்னிகைகளைப் பலாத்காரமாயெடுத்துவந்தான். மண்டோதரி அதைக்கண்டு மிகவும் வருத்தமடைந்து, "ஐயோ! என் பர்த்தா என்னைத் திரும்பிப்பாராமல் இதர ஸ்த்ரீகளிடத்தில் ஆசை

வைத்துத் திரிகிறாரே. இனி என்னுயிரைவைத்துக்கொள்வதில் ப்ரயோஜனமில்லையெ"ன்று, ராவணனால் கொண்டுவரப்பட்ட விஷகலசத்தையெடுத்துக் குடித்துவிட்டாள். உடனே தேஜோமயமான கர்ப்பந்தரித்ததைக்கண்டு, "ஐயோ! மோசம்போனேனே! என் பர்த்தா இவ்விடம் விட்டுப்போய் வெகு நாளாயிற்றே! அவரில்லாத ஸமயத்தில் நான் கர்ப்பந்தரித்து ப்ரஸவித்ததை அவர்கேள்விப்பட்டால் என்னிடத்தில் ஸந்தேஹித்து என்னைக் கொன்றுவிடுவார். ஆகையால் அவர் வருவதற்குள் இதற்கேதாவது உபாயஞ்செய்யவேண்டுமெ"ன்று, விமானத்திலேறி தீர்த்தயாத்ரைசெய்கிற பாவனையாய் குருக்ஷேத்ரத்திற்குப் போனாள். அங்கே அந்தக் கர்ப்பத்தைப் பூமியில் புதைத்துவிட்டு, ஸரஸ்வதியில் ஸ்நாநஞ்செய்து, லங்கைக்குத் திரும்பிவந்தாள்.

வெகு காலங்கழித்து விதேஹாதிபதியான ஜனகர் அவ்விடம் வந்து, ஜாங்கலதேசத்தில் யக்ஞஞ்செய்ய ஆரம்பித்தார். தங்கக் கலப்பையால் பூமியில் உழும்பொழுது அதிலிருந்து ஸீதையென்று ஒரு பெண் உண்டானாள். அப்பொழுது ஆகாசத்திலிருந்து புஷ்ப மாரி பொழிந்தது. ஜனகர் ப்ரமித்து நிற்கையில், ஆகாசவாணி "ஜனகரே! இவளை நீர் புத்ரியாய்வைத்து வளர்த்துவாரும். இவளால் அநேக கார்யங்கள் நடக்கவேண்டியிருக்கின்றன. இவள் ஸகல லோகங்களுக்கும் மங்களத்தைச் செய்வாள். கலப்பையால் உழப்பட்ட பூமியிலிருந்து உண்டானபடியால் இவளுக்கு ஸீதையென்று பெயரிருக்கட்டுமெ"ன்றது. அத். VIII.

முன்னொரு காலத்தில் பரமசிவன் ஜலந்தராஸுரனுடன் கோரயுத்தஞ்செய்தார். அவனைப் பலவாறாக உபத்ரவித்தும் அவன் பலத்திலும் வீர்யத்திலும் வரவர விருத்தியடைந்தான். அதைக்கண்டு பார்வதி விஷ்ணுவைப்பார்த்து, "இவன் ப்ருந்தையென்ற தன் பார்யையின் பதிவ்ரதாமஹிமையால் ஒருவராலும் ஜயிக்கப்படாமலிருக்கிறானெ"ன்று ஜாடையாகச் சொன்னாள். ஜனார்த்தனன் அவளுடைய உத்தேசத்தையறிந்து, ப்ருந்தை இருக்குமிடத்திற்குச் சென்றார். அன்றிராத்ரி ப்ருந்தை தூங்கிக்கொண்டிருக்கையில், தன் பர்த்தா எண்ணெய்தேய்த்துக்கொண்டு வஸ்த்ரமில்லாமல் ஒரு எருமைக் கடாவின்மேலேறித் தெற்கு முகமாய்ச் செல்வதையும், பிறகு அவன் தலையில்லாத முண்டமாய் இருளால் சூழப்பட்டதையும் ஸ்வப்னத்தில் கண்டு, திடீரென்று

விழித்துக்கொண்டாள். பிறகு நகரமெங்கும் உலாவித்திரிந்தும் ஆறுதலடையாமல், பட்டணத்திற்கு வெளியிலுள்ள தோட்டங்களில் இரண்டு ஸகிகளுடன் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் கோரரூபமுள்ள இரண்டு ராக்ஷஸர்களைக் கண்டு பயந்து நடுநடுங்கி, மூலைக்குமூலையோடினாள். அங்கே ஓர் ரிஷி சிஷ்யர்களுடன் மௌனமாய்த் தபஸ்செய்துகொண்டிருப்பதைக் கண்டு, அவரைச் சரணமடைந்து, கழுத்தைக் கட்டிக்கொண்டு, "ஸ்வாமீ! என்னை ரக்ஷியுமெ"ன்று கதறினாள். அதற்கு அந்த ரிஷி ஸமாதியைவிட்டுக் கண்ணைத் திறந்து, "பெண்ணே! பயப்படாதேயெ"ன்று அந்த ராக்ஷஸர்களை ஹுங்காரத்தால் அதட்டித் துரத்தினார்.

அவருடைய ஆச்சர்யகரமான சக்தியைக்கண்டு பிருந்தை வணக்கமாய் நமஸ்கரித்து, "ஸ்வாமீ! தாங்கள் எனக்குக் கிருபை செய்யவேண்டும். என் பர்த்தாவான ஜலந்தராஸுரன் பரமசிவனுடன் யுத்தஞ்செய்துகொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது இருக்கும் ஸ்திதியென்னவென்று தங்களுடைய ஞானதிருஷ்டியால் தெரிந்து சொல்லுங்களெ"ன்று வேண்டினாள். உடனே அந்த மஹர்ஷி ஆகாசத்தைப் பார்க்க, அங்கிருந்து இரண்டு வானரர்கள் இறங்கிவந்து அவரை நமஸ்கரித்தார்கள். அவர் ஓர் ஸம்ஜ்ஞைசெய்ய, அவர்கள் மறைந்து ஒருக்ஷணத்தில் ஜலந்தரனுடைய சிரஸையும் கைகளையும் கொண்டுவந்து அந்த ரிஷிக்கெதிரே வைத்தார்கள்; பிருந்தை தன் பர்த்தா மரணமடைந்தாரென்றறிந்து மூர்ச்சையடைந்தாள். அந்த ரிஷி தன் கடத்திலிருந்த ஜலத்தால் அவளை ப்ரோக்ஷணஞ்செய்ய, அவள் ப்ரக்ஞைதெளிந்து, அவருடைய பாதங்களில் விழுந்து, "ஸ்வாமீ! தங்களுடைய அபாரசக்தியால் என் பர்த்தாவைப் பிழைக்கும்படி செய்யவேண்டுமெ"ன்று கண்ணுங்கண்ணீருமாய் ப்ரார்த்தித்தாள். அந்த ரிஷி, "பெண்ணே! ருத்ரனால் கொல்லப்பட்டவனைப் பிழைப்பிக்க ஒருவராலும் முடியாது. ஆயினும் நீ படுந்துக்கத்தால் என் மனமுருகிற்று; உன்னிஷ்டப்படி செய்கிறேனெ"ன்று மறைந்தார். உடனே ஜலந்தராஸுரன் தூங்கிவிழித்தவன்போலெழுந்திருக்க, அவ்விருவரும் அளவற்ற ஸந்தோஷமடைந்து நகரத்திற்குச்சென்று வெகுகாலம் ஸுகமாய் வாழ்ந்தார்கள்.

ஒருநாள் அவனுடன் க்ரீடித்து முடிந்தவுடன் தனக்கெதிரில் மஹாவிஷ்ணுவிருக்கக்கண்டு கடுங்கோபங்கொண்டு, "ஓய்! மஹா

விஷ்ணுவே! இதெல்லாம் உன் மாயையா? எந்தப் பாபத்திற்கும் துணிந்தவன் நீயே. வனத்தில் நான் கண்ட மஹர்ஷியும் நீயே. உன்னுடனிருந்த சிஷ்யன் கருடனல்லவா? உனக்கெதிரே வந்திறங்கின குரங்குகள் புண்யசீலன் ஸுசீலனென்ற நித்யஸூரிகளல்லவா? என்னைப் பயமுறுத்தின ராக்ஷஸர்கள் ஜயவிஜயர்களென்ற உன் த்வாரபாலகர்களன்றோ? நீ என்னை வஞ்சித்து என் பதிவ்ரதாதர்மத்தைக் கெடுத்து, அதின் மூலமாய் என் பர்த்தாவைக் கொன்றதற்காக உன் பார்யையை இந்த ஜயவிஜயர்கள் ராக்ஷஸர்களாய்ப் பிறந்து அபஹரிக்கட்டும். அதனால் நீ பலகஷ்டங்களையனுபவித்து வாய்விட்டலறுவாய். ஸர்வேச்வரனாயிருந்தும் குரங்குகளின் ஸஹாயத்தை ப்ரார்த்திப்பாய். இந்தப் புண்யசீலனும ஸுசீலனும் குரங்குகளாய்ப் பிறக்கட்டுமெ"ன்று சபித்து அக்னிப்ரவேசஞ்செய்தாள்.—ஆ. ரா. ஸாரகாண்டம் IV.

ஸஹ்யபர்வதத்திற்கருகிலுள்ள கரவீரநகரத்தில் தர்மதத்தனென்று ஓர் ப்ராஹ்மணன் பரமவிஷ்ணுபக்தனாய் ஸகல வ்ரதங்களையுமனுஷ்டித்து, த்வாதசாக்ஷரமந்த்ரத்தால் மதுஸூதனனை உபாஸித்து, தன்னாலியன்றவரையில் அதிதிகளை உபசரித்துவந்தார். ஒருநாள் கார்த்திகைமாஸத்தில் ஏகாதசிதினத்தில் உபவாஸமிருந்து இரவில் கண்விழித்து, விடியற்காலத்தில் கோவிலுக்குப்போய் பூஜைசெய்வதற்காகப் போகும்வழியில் ஒரு ராக்ஷஸி வழிமறிக்க, அவள்மேல் பூஜாத்ரவ்யங்களையெறிந்து, பகவந்நாமத்தை மனவில் த்யானித்துத் துளஸீதீர்த்தத்தைத் தெளித்தார். அதின் மஹிமையால் அவளுடைய பாபங்கள் நீங்கி, அவளுக்குப் பூர்வஜன்மஞாபகம் வந்து, அந்த ப்ராஹ்மணரைப்பார்த்து, "ஸ்வாமீ! ஸௌராஷ்ட்ரதேசத்தில் பிக்ஷு என்று ஒரு ப்ராஹ்மணரிருந்தார். நான் அவருடைய பார்யை. என்பெயர் கலஹா. நான் எப்பொழுதும் அவரை எதிர்த்துப் பேசுவேன். அவருக்கு அன்புடன் அன்னமிட்டதில்லை. ப்ரதிதினமும் ஸரஸ பதார்த்தங்களையும் மதுரமாய்ப் பக்வஞ்செய்து, நான் புசித்து திருப்தியாகப் புஜித்துப் பிறகு அவருக்குப் போடுவேன்.

இப்படிக் கஷ்டப்பட்டுக்கொண்டு அந்த ப்ராஹ்மணன் ஓர் யுக்திசெய்தார். ஒருநாள் என்னிடத்தில் வந்து, "ப்ரியே! இன்று நமது க்ருஹத்திற்கு ஒருவரையும் போஜனத்திற்கழைக்கக்கூடாது. என் மித்ரன் மிகவும் பொல்லாதவன். அவன் இனி ஒரு

நாளும் இங்கே வரக்கூடாதெ"ன்றூர். நான், "நன்றுயிருக்கிறது, உமது மித்ரன் மஹாஸாது. அவரைத்தான் இன்று விருந்திற்க ழைப்பேனெ"ன்று சொல்லி, அவருடைய வீட்டிற்குச் சென்று, அ வரை நமஸ்கரித்து, ப்ரார்த்தித்து, அழைத்துவந்து, வெகு உபசா ரஞ்செய்து, திருபதியாய் விருந்திட்டேன். அன்றுமுதல் என் பர்த் தா தனக்கு ஆகவேண்டிய ஸகல கார்யங்களையும் செய்யக்கூடா தென்று என்னை ஆக்ஞாபிக்க, நான் அதற்கு விரோதமாய் அவை களைக் குறைவறச் செய்துவந்தேன். ஒருநாள் என் மாமனு ருக்கு ச்ராத்தம் வந்தது. என் பர்த்தா, "பெண்ணே! இன்றைக்கு என் பிதாவிற்கு ச்ராத்ததினம்; அந்த மஹாபாபிக்கு ச்ராத்தம் பண்ணவேமாட்டேனெ"ன்றூர். நான் கடுங்கோபங்கொண்டு, "உமக்கு ஏன் புத்தி இப்படிப் போயிற்று? உம்மைப் பிள்ளை யாகப் பெற்றது எதற்காக? தகப்பனுக்கு ச்ராத்தஞ்செய்யாத நீர் என்ன கதியடைவீரோவெ"ன்று, அவரைக் கண்டித்த, உடனே அநேக ஸாதுக்களை அழைத்துவந்தேன். என் பர்த் தா, "இன்றையதினம் ஒன்றும சமையல் செய்யக்கூடாது. ஒரு ப்ராஹ்மணன் போதும். அரைநாழிகையில ச்ராத்தம் நடக்கவே ண்டுமெ"ன்றார். நான் பதினெட்டு ப்ராஹ்மணர்களை வரித்து, ஸ்நாநஞ்செய்து, நியமநிஷ்டையுடன் ஸகலபதார்த்தங்களையும் பக்‌ வஞ்செய்து, வைதிகர்களை ஒன்றுவிடாமல் கிட்டவிருந்து நடத்திவைத்து, அஸ்தமிக்கும் ஸமயத்தில் ச்ராத்தத்தை முடித் தேன். அப்பொழுது என் பர்த்தா, "பெண்ணே! எனக்குப் பசி காதை அடைக்கிறது. நாமிருவரும் முந்திப் போஜனஞ்செய்து விட்டு, மிகுந்ததை இந்தச் சாமம்பேர்களுக்குப் போடுவோமெ"ன் றூர். நான் அவரை நிந்தித்து, "தகப்பனுக்கு ச்ராத்தம் செய்து விட்டு, ப்ராஹ்மணத்தபர்களைப் பூஜித்துப், பரிபூரணமாய் அவர் களுக்கு அன்னமமபாட்டி, அவர்கள் திருப்திசொல்லிப் பிறகு நமக்கு உத்திரவுகொடுத்தால் போஜனஞ்செய்வோம். உம்மைப் போன்ற பாதகனை நான் பார்த்ததில்லையெ"ன்று'விதிப்படி ப்ராஹ் மணர்களுக்கு அன்னமிட்டுத் திருப்திசெய்வித்து, ஏராளமாய்த் தக்ஷிணைகொடுத்து, வஸ்த்ரங்கள் மோதிரங்கள் பவித்ரங்கள் கடுக் கன்கள் குடை பாதுகை ஆஸனம் முதலியவைகளால் அவர்களை உபசரித்து, அவர்கள் உத்திரவுகொடுத்தபிறகு என் பர்த்தாவைப் போஜனத்திற்கழைத்தேன். அவர், "நான் இன்று போஜனம்

செய்யமாட்டேன். நீ எனக்குமுந்தி போஜனஞ்செய்துவிட்டு ஸுகமாய்த் தூங்கு"என்றார். நான், "இதென்ன அந்யாயம்! ச்ராத்தம் செய்துவிட்டுப் பட்டினியாயிருந்தால் மறுபடியும் ச்ராத்தம் செய்யவேண்டுமே. பர்த்தாவிற்குமுன் புஜிக்கும் ஸ்த்ரீ நரகத்தை யடைவாள். எனக்கு அந்தக் கதிவரவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறீரோ?"வென்று அவரை அதட்டித், திவ்யான்னபோஜனம் பரிமாறிப் பிறகு நான் அவருடைய சேஷத்தைப் புஜித்தேன். அப்பொழுது என் கணவன் வேறு ஞாபகமாயிருந்து, "பெண்ணே! இந்த ச்ராத்தபிண்டங்களை நல்லதீர்த்தத்தில் போட்டுவாவெ"ன்றார். நான் உடனே அந்தப் பிண்டங்களைக் குப்பைமேட்டில் எறிந்து நாய்களையும் கழுதைகளையும் தின்னும்படி செய்தேன். அவர் மிகவும் வருத்தமடைந்து ஞாபகப்படுத்திக்கொண்டு, "நல்ல காரியம் செய்தாய். அவை அங்கேயே கிடக்கட்டுமே"என்றார். நான், "என்ன வார்த்தை சொன்னீர்? ச்ராத்தபிண்டங்களை அசுத்தமான இடத்தில் போடலாமா? அசுத்தமான ப்ராணிகள் தொடும்படி விடலாமா?"வென்று நாய்களையும் கழுதைகளையும் அடித்துத்துரத்தி அந்தப்பிண்டங்களை நல்லதீர்த்தத்தில் போட்டேன்.

இப்படி வெகுகாலஞ்சென்றது. என் துர்க்குணத்தை ஸஹிக்காமல் என் பர்த்தா மறுவிவாஹம்செய்துகொள்ள யத்னித்தார். நான் பொறாமைகொண்டு விஷத்தைக் குடித்து ப்ராணனைவிட்டேன். யமலோகத்தில் தர்மராஜன் சித்ரகுப்தனை அழைத்து, "இவளுடைய பாபபுண்யங்களை விவரமாய்ச்சொல்"லென்றார். அவன், "ஸ்வாமி! இவள் புண்யமென்பதே செய்யவில்லை. பர்த்தாவிற்குமுந்தி ப்ரதிதினமும் போஜனஞ்செய்தபடியால் வல்லூறென்ற ப்ராணியாய்ப் பிறந்து, தன் மலத்தையே புஜிப்பாள். சமையல் செய்த பாத்ரத்திலேயே ரஹஸ்யமாய்ப் புஜித்துவந்தபடியால், இவள் பூனையாய்ப் பிறந்து தன் சிசுக்களையே கொன்று தின்பாள். விஷத்தைக் குடித்து ப்ராணனைவிட்டபடியால், இவள் வெகுகாலம் ப்ரேதசரீரத்துடன் அலைவாள். பிறகு இவளை ஒரு பாலைவனத்தில் தள்ளிவிடவேண்டும். அங்கே ப்ரேதசரீரத்துடன் வெகுகாலமிருந்து, பின்பு மூன்று ஜன்மங்களெடுத்து, அப்பொழுதும் பாபங்களையே செய்துவருவா"ளென்றான். நான் பதினைந்து வர்ஷங்கள்வரையில் அந்தப் பாலைவனத்திலிருந்து, பிறகு அங்கே செத்துக்கிடந்த ஒரு செட்டிப்பெண்ணின் தேஹத்தில்

ப்ரவேசித்து, க்ருஷ்ணை வேணியென்ற நதிகள் சேருமிடத்தில் வஸித்தேன். அங்குவந்த சில ஸாதுக்கள் என்னை அந்தச் சரீரத்தைவிட்டு விலக்கித் துரத்தினார்கள். பிறகு பூமியெங்கும் திரிந்து இன்று இங்கே வந்து, உமது க்ருபையால் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டேன். இனி இந்த ப்ரேதசரீரம் எப்படித் தொலையும்? மூன்று ஜன்மங்களையும் எப்படி முடிப்பே"னென்று கேட்டாள்.

அந்த ப்ராஹ்மணன் அதைக்கேட்டு மனமுருகி, "நான் பிறந்தது முதல் செய்துவரும் கார்த்திகைவ்ரதத்தின் புண்யத்தில் பாதியை உனக்குத் தருகிறே"னென்று, வாஸுதேவமந்த்ரத்தை அவள் கேட்கும்படி ஜபித்துத், துளஸீதீர்த்தத்தால் ஸ்நானஞ்செய்வித்தார். உடனே அவளுடைய ப்ரேதசரீரம் நீங்கிற்று; திவ்ய தேஹம் கிடைத்தது. ஆகாசத்திலிருந்து விஷ்ணுகணங்கள் திவ்ய விமானத்துடன் வந்து அவளை விசேஷ உபசாரத்துடன் அழைத்துக்கொண்டு விஷ்ணுலோகஞ்சென்றார்கள்.

தர்மதத்தர் முன்போல் விஷ்ணுவ்ரதத்தை அநுஷ்டித்து வந்து, அந்த்யகாலத்தில் தமது இரண்டு பார்யைகளுடன் வைகுண்டஞ்சென்று பரவானுடைய ஸந்நிதியில் பதினாயிரம் வர்ஷங்கள் ஸேவைசெய்துகொண்டிருந்து, அந்தப் புண்யம் முடிந்தபிறகு ஸூர்யவம்சத்தில் தசரதசக்ரவர்த்தியாய்ப் பிறந்தார். அவருடைய இரண்டு பார்யைகளும் கௌஸல்யையாயும் ஸுமித்ரையாயும் பிறந்தார்கள். அவருடைய க்ருபையால் உத்தமகதியடைந்த கலஹையென்ற ஸ்த்ரீ கைகேயியாய்ப் பிறந்தாள். பகவான் அவருடைய பக்திக்கு வசப்பட்டு, அவருக்கு ராமலக்ஷ்மண பரதசத்ருக்னர்களென்ற நான்கு புத்ரர்களாய் அவதாரஞ்செய்தார்:—ஷை ஸர்க்கம் V.

முன்னொருகாலத்தில் பத்மாக்ஷனென்றவோர் அரசனிருந்தான். அவன் மஹாலக்ஷ்மியைப் புத்ரியாயடையவேண்டுமென்று கடுந்தபஸ்செய்தான். லக்ஷ்மீதேவி அவனுக்கு ப்ரஸன்னமாய், "பத்மாக்ஷ! நீ மஹாவிஷ்ணுவின் க்ருபையைப்பெற்று என்னைப் புத்ரியாயடையக் கடவாயெ"ன்றாள். அவன் பகவானைத் தபஸால் ஆராதிக்க, அவர் ப்ரத்யக்ஷமாய் ஒரு மாதுளம்பழத்தை அவனுக்குக் கொடுத்தார். அதில் ஒரு பாதியில் விதையும் மற்றொரு

யாதியில் தேஜோமயமான ஓர் பெண்ணுமிருக்கக்கண்டு, அவளுக்குப் பத்மாவென்று பெயரிட்டு, வெகு செல்வமாய் வளர்த்துவந்தான். அவளுக்கு விவாஹகாலம் ஸமீபித்தபொழுது, ஸ்வயம்வரத்தை ஏற்படுத்தி, ஸகல தேசத்தரசர்களையும் அழைத்தான். ரிஷிகளும் தேவர்களும் ராக்ஷஸர்களும் இதர ஜந்துக்களும் மலைகளும் நதிகளும் விசித்ரமான ரூபத்துடன் ஸ்வயம்வரமண்டபத்தில் கூடியிருக்கையில், பத்மாக்ஷன் யாவரையும் பார்த்து, "இதோ, ஆகாசத்தில் காணப்படுகிறநீலநிறத்தை எடுத்துத் தேஹத்தில் பூசிக்கொள்ளுகிறவனுக்கு என் பெண்ணை விவாஹஞ்செய்துகொடுக்கிறேனென்"றான். எல்லோரும், "இதென்ன? ஒருவராலும் அஸாத்யமான கார்யத்தை இவன் செய்யச்சொல்லுகிறான். இப்படிப் போர்க்குக்காட்டித் தனக்குவேண்டியவருக்குக் கொடுக்கப்போகிறானே"வென்று கோபித்து, அவனை யுத்தத்தில் ஜயித்துப் பத்மையை அபஹரிக்க யத்னித்தார்கள். அப்பொழுது பத்மாக்ஷன் வில்லை வளைத்துச் சரமாரி தொடுக்கத், தேவர்களும் அரசர்களும் மூலைக்கு மூலை ஓடியொளிந்தார்கள். அஸுரர்களும் ராக்ஷஸர்களும் ஒன்று சேர்ந்து பத்மாக்ஷனை ஜயித்துக் கொன்று, அவனுடைய ராஜ்யத்தை நாசஞ்செய்து பத்மையைப் பிடிக்க யத்னிக்கையில், அவள் திடீரென்று அக்னியில் ப்ரவேசித்தாள்.

அந்தப பெண் மஹாவிஷ்ணுவின் நித்யமான சக்தியாகையால், வெகுநாள் அக்னிகுண்டத்தில் வஸித்துவந்தாள். ஒரு காலத்தில் ராவணன் திக்விஜயத்திற்காக அந்த மார்க்கமாய் வருகையில், ஸாரணனென்ற அவனுடைய மந்த்ரி, "மஹாராஜ! அதோ பாருங்கள். அந்த அக்னிகுண்டத்தின் ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் கன்னிகை பத்மையல்லவா? நாமெல்லோரும் இவளுடைய ஸ்வயம்வரத்திற்குப்போய், இவளுடைய பிதாவைக் கொன்று, ராஜ்யத்தை நாசஞ்செய்து, இவளைத் தேடிக்காணவில்லை. இப்பொழுது அகப்பட்டாள்; விடக்கூடாதெ"ன்றான். ராவணன் புஷ்பகவிமானத்தை அவ்விடத்திறக்கிக்கொண்டுவந்து, அவளைத் தாவிப்பிடிக்கப்போகையில், அவள் முன்போலவே அக்னிகுண்டத்தில மறைந்துவிட்டாள். ராவணன் அந்த அக்னியையணைத்துச் சாம்பலைக் கிளறிப் பார்க்கையில, ஐந்து உத்தமமான ரத்னங்களைக் கண்டான். அவைகளையெடுத்துக்கொண்டு லங்கைக்குப் போய்த் தன் பூஜையறையில் ஓர் பெட்டியில் பத்ரமாய் வைத்திருந்தான்.

அன்றிராத்ரி மந்தோதரியுடன் படுத்திருக்கையில் அவளுக்கு அந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, “நீ அந்த ரத்னங்களை மாலையாகப் போட்டுக்கொள்”ளென்றான். அவள் அங்கே சென்று அந்தப் பெட்டியை அசைக்க முடியாமல் ராவணனுக்குத் தெரிவிக்க, அவன் தன் இருபது கரங்களாலும் அதை அசைக்கமுடியாமல் வெட்கமடைந்து, அவ்விடத்திலேயே அந்தப் பெட்டியைத் திறந்து பார்க்கப், பத்மை முன்போல் அங்கிருந்து வெளிப்பட்டாள். அவளுடைய அத்புதமான ஸௌந்தர்யத்தைப் பார்ப்பதற்கு ஸகல ராக்ஷஸர்களும் கூடினார்கள். அப்பொழுது ராவணன் அவர்களுக்கு நடந்த விருத்தாந்தங்களை விஸ்தாரமாய்ச் சொல்ல, மந்தோதரி கோபங்கொண்டு, “பிப்பலாதனுக்குப் பிறந்த கிருத்யையென்ற பெண்ணால் குலம் முழுவதும் நாசமானதுபோல், இவள் பிறந்தவுடனே தன் பெற்றோரையும் ராஜ்யத்தையும் ப்ரஜைகளையுமழித்தாள். இனி வரவர என்ன செய்வாளோ? இவளை இங்கே ஏன் கொண்டுவந்தீர்? இவளே தங்களுக்கு ம்ருத்யுவாகப் போகிறாள். இந்த க்ஷணமே இவளை நிர்மானுஷ்யமானவிடத்திற்கொண்டுபோய் எறிந்துவிடவேண்டும். ஆனால் இவளைப் பார்த்தவர்களுக்கு நாசம் நேருமென்றபடியால் இந்தப் பெட்டியை எங்கேயாவது புதைத்துவிடுங்கள். கொஞ்சகாலங்கழித்து இவள் ஒரு ப்ரஹ்மஞானியான கிருஹஸ்தனுடைய வீட்டில் வளரப்போகிறா”ளென்றாள். அப்பொழுது பத்மை, “நீங்கள் செய்வதைச் செய்யுங்கள். விதியை வெல்லக்கூடுமா? இந்த லங்கைக்கு இனி அநேகந்தடவை வரப்போகிறேன். ராவணனையும் உங்களெல்லோரையும் நாசஞ்செய்ய அதிசீக்ரத்தில் இங்கே வருவேன். மறுதடவை நிகும்பனுடைய புத்ரனை பௌண்ட்ரகனையும், அவனுக்கு ஸஹாயஞ்செய்யும் சதமுகராவணனையும் கொல்வதற்காக வருவேன். மறுதடவை மூலகாஸுரனையும் கும்பகர்ணனுடைய புத்ரனை சூரனையும் கொல்வதற்காக இந்த லங்கைக்கு வருவே”னென்றாள். அதைக்கேட்டு ராக்ஷஸர்கள் பயத்தால் மெய்மறந்தார்கள். ராவணன் கடுங்கோபத்துடன், “இவளை இப்பொழுதே கொன்றுவிடுகிறே”னென்று கத்தியையுருவ, மந்தோதரி, “இவளுக்கு உம்மால் மரணம் ஏற்படவில்லை. இவளால் உமக்கு மரணம் விதிக்கப்பட்டிருக்கிறது. வெகுகாலத்திற்குப் பின் வருங்கெடுதியை இப்பொழுதே தேடிக்கொள்ளவேண்டா”மென்று தடுத்தாள். ராவணன் அதற்கிசைந்து தூதர்களைக்கொ

ண்டு அந்தப் பெட்டியை வெகுதூரத்திற்கப்பால் புதைக்கும்படி செய்தான்.

பிறகு அவ்விடத்தில் விதேஹவம்சத்தரசர்களுடைய நகரம் ஏற்பட்டது. ஜனகமஹாராஜன் அந்தராஜ்யத்தை ஆண்டுவரும் பொழுது, இந்தப்பெட்டி புதைக்கப்பட்ட பூமியை ஒரு ப்ராஹ்மணனுக்குத் தானஞ்செய்தார். அவர் அதை உழுவதற்காக நல்ல முஹூர்த்தத்தைத் தேடி அநேக வர்ஷங்களுக்குப்பிறகு ஒரு சுபலக்னத்தில் தன் குடியானவனைக்கொண்டு அதை உழுதார். அப்பொழுது கலப்பையின் நுனியில் அந்தப்பெட்டி தட்டுப்பட்டது. அந்தக் குடியானவன் அதை வெளியிலெடுத்து தன் யஜமானனிடத்தில் கொண்டுபோய், "ஸ்வாமீ! தாங்கள் வைத்த முஹூர்த்தம் மிகவும் ச்ரேஷ்டமானது. இந்தப் பெட்டியில் ஏதோ விலையற்ற த்ரவ்யங்களிருக்கின்றனவென்றெண்ணுகிறேன். வெகு பளுவாயிருக்கிறது; இதைப்பெற்றுக்கொள்ளுங்க"ளென்றான். அவர், "அரசன் நமக்குக் கொடுத்த பூமியிலிருந்து இது கிடைத்தபடியால், இதை அவரிடத்தில் ஒப்புவிக்கவேண்டிய"தென்று, ராஜஸபைக்குச் சென்று, அந்தப் பெட்டியை ஜனகரிடத்தில் கொடுத்து, "மஹாராஜ! தாங்கள் எனக்குத் தானஞ்செய்த பூமியிலிருந்து இந்த நிதி கிடைத்தது, அது தங்களுக்கே ஸொந்தமானது. இதோ பெற்றுக்கொள்ளுங்க"ளென்றார். அதற்கு ஜனகர், "இதென்ன ந்யாயம்? நான் தங்களுக்கு அந்தப் பூமியைத் தானஞ்செய்தபொழுது அதிலுள்ள ஸகல வஸ்துக்களும் தங்களுடையவையென்றே எண்ணிச் செய்தேன். இந்த நிதி தங்களுடையதே. தானஞ்செய்த வஸ்துவை மறுபடியும் க்ரஹித்த மஹாபாபம் என்னைச் சேரவேண்டுமோ?"வென்றார். இப்படி இருவரும் விவாதஞ்செய்வதைப் பார்த்த சதானந்தர், "இது வெகு நன்றாயிருக்கிறது. பெட்டியில் இன்ன பதார்த்தமிருக்கிறதென்று அறிந்துகொள்ளாமல் இவ்வளவு நேரம் விவாதஞ்செய்கிறீர்கள். பெட்டியைத் திறந்து பாருங்க"ளென்றார். ஜனகர் அப்படிச்செய்ய, கோடிஸூர்யப்ரகாசமுள்ள ஒரு கன்யை அதிலிருக்கக்கண்டு, எல்லோரும் அளவற்ற ஆச்சர்யமடைந்தார்கள். அந்த ப்ராஹ்மணன் அந்தக் கன்யையை ஜனகரிடம் ஒப்புவித்தார். ஜனகர் அந்தக் குழந்தையைத் தன் புத்ரியாய்ப் பாவித்து வளர்த்துவந்தார்.

அவள் மாதுளம்பழத்திலிருந்து வெளியில் வந்தபடியால் மாதுளாங்கியென்றும், அக்னி குண்டத்தில் வாஸஞ்செய்ததால்

அக்னிகர்ப்பையென்றும், ரத்னரூபமாயிருந்ததால் ரத்னவதியென்றும், பூமியிலிருந்து வெளிப்பட்டதால் பூபுத்ரியென்றும், ஜனகரால் வளர்க்கப்பட்டதால் ஜானகியென்றும், பத்மாக்ஷனுடைய புத்ரியாகையால் பத்மையென்றும், கலப்பையின் நுனியில் வெளிப்பட்டதால் ஸீதையென்றும், விதேஹராஜனுடைய புத்ரியாகையால் வைதேஹியென்றும், மிதிலாநகரத்தரசனுடைய புத்ரியாகையால் மைதிலியென்றும் பலநாமங்களேற்பட்டன. ஆகாசத்திலுள்ள நீலநிறத்தைப்போன்ற தேஹகாந்தியுடைய ராமன் அவளை விவாஹஞ்செய்து, பத்மாக்ஷனுடைய ப்ரதிக்ஞையை நிறைவேற்றினார்.—ஸ்கா. ஸாரகாண்டம் III.

ஜயவிஜயர்கள் ராவணகும்பகர்ணர்களாய்ப் பிறந்ததைப் பற்றி 49, 32-ல் ஸனத்குமாரரென்ற நோட்டைப்பார்க்க.

ஒருகாலத்தில் நாரதருக்குப் பகவானிடத்திலுள்ள பக்தி அதிகரித்தது; தக்ஷப்ரஜாபதியால் அவருக்கேற்பட்ட சாபம் அதினால் விலகிற்று. இந்த்ரன் அவருடைய பக்தியைக் கண்டுபயந்து, அவருடைய தபஸைக் கெடுக்கும்படி மன்மதனையனுப்பியும் வீணாயிற்று. அதினால் நாரதர் மிகவும் கர்வமடைந்து, பரமசிவனிடத்தில் தன் மஹிமையைப் புகழ்ந்துகொண்டார். சங்கரன் மனமிரங்கி "இதை விஷ்ணுவிடத்தில் சொல்லவேண்டாம். ரஹஸ்யமாய் வைத்திரு"மென்றார்.

ஆனால் பகவானுடைய மாயையைத் தடுக்கமுடியுமா? நாரதர் உடனே சவேதத்வீபத்திற்குச் சென்றார்; பகவான் வெகுதந்த்ரமாய் அவரைத் தன் மஹிமையை வர்ணிக்கும்படி செய்தார். நாரதர் கர்வத்தால் கெட்டுப்போவாரென்று ஜனார்த்தனன் கிருபைகூர்ந்து, தன் மாயையால் ஓர் ராஜ்யத்தையும், அதற்குச் சீலநிதியென்று அரசனையும், அவனுக்கு விச்வமோஹினியென்ற ஒரு புத்ரியையும் ஸ்ருஷ்டித்தார். அவளுடைய ஸ்வயம்வரத்திற்கு நாரதர் சென்று, அவளைக்கண்டு மோஹித்து, ஹரியை ஆச்ரயித்து, "ஸ்வாமி! தங்களைப்போல் ஸுந்தரமான ரூபத்தை எனக்கும் அனுக்ரஹிக்கவேண்டும். நான் விச்வமோஹினியை விவாஹஞ் செய்துகொள்ள விரும்புகிறேன்"என்று ப்ரார்த்தித்தார். "உனக்கு ஏது ஹிதமோ அதைச் செய்கிறே"னென்று மதுஸூதனன் ப்ரதிக்ஞை செய்ய, நாரதர் ஸ்வயம்வரத்திற்குச் சென்று, அங்கே வந்த